



# பிரம்மா
# ராவணப்பிரம்மா
# பகவான் ராவணப்பிரம்மா

**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்**




**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்

**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 40 முதல் பதிப்பு: ஆகஸ்ட் - 2021
பதிப்பு: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

ராவணப்பிரம்மா என்னும் பெயர் நீங்கள் எல்லோரும் கேட்டிருப்பீர்கள். அந்தப் பெயரை இரண்டு பாகங்களாக பிரிக்கலாம். ஒன்று ராவணா, இரண்டு பிரம்மா. “ராவணா” என்னும் சொல்லைப் பற்றி பிறகு சொல்லிக் கொள்ளலாம். முதலில் “பிரம்மா” என்னும் சொல்லைப் பற்றி சொல்லிக் கொள்ளலாம். பிரம்மா என்றால் பெரியவர் என்னும் அர்த்தம். அனைத்து லோகத்திற்கு பெரியவர் ஒருவரே இருப்பார். ஒருவரே கடவுள் என்று சொல்லலாம். கடவுள் என்றால்! **“தேடப்படுகின்றவர்”** என்னும் அர்த்தம். அதனை **“தேடப்படுபவர் கடவுள் என்றும்”** சொல்லலாம். கடவுளை தேடுபவர் என்றால் அவர் யாருக்கும் தெரியாமல் எங்கேயோ ஓரிடத்தில் இருக்க வேண்டும் அல்லவா! என்று யாராவது கேட்கலாம். அதற்கு பதிலாக கடவுள் எங்கேயோ ஒரு இடத்தில் இருக்கின்றார் என்று ஒப்புக்கொண்டால், இருக்கின்றவர் யார்? என்றும் கேள்வி வந்து கொண்டே இருக்கும். அதனை நேராக கேட்டால் “ கடவுள் யார்? ” என்னும் கேள்வி கேட்கலாம். கேள்வி இருக்கும்போது பதில் கண்டிப்பாக இருக்கும். ஆனால் அந்த பதில் எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம் அல்லது தெரியாமலிருக்கலாம். கேள்வி, கேள்விக்கு பதில் இரண்டும் இருக்கும்போது உலகத்தில் பெரிய கேள்வியாக நின்றுபோனது. **“கடவுள் யார்?”** என்பது. அந்தக் கேள்விக்கு பதில் இருக்கும் போது யாருக்கும் தெரியாதபோது ரகசியமான பதில் “கடவுள் பலானவர் என்பது. ஒருவிதமாக சொல்லினால் பதில் இல்லாத கேள்வி என்று சொல்லலாம். கேள்வி இருக்கும்போது பதில் இருக்கும். மேலும் யாருக்கும் தெரியாத பதில் கேள்வி என்றும் சொல்லலாம். கேள்வி ஒருவருடையது என்றால் பதில் இன்னொருவர் சொல்லவேண்டியது இருக்கும். ஆனால் இந்த கேள்விக்கு பதில் இருந்தால் அந்த பதில் கடவுளுக்கு தெரியும். ஆனால் கேள்வி யாருக்காவது இருக்கலாம், பதில் மட்டும் கடவுளுடையது தான் என்று சொல்லலாம். கடவுள் தன் பதிலை நேராக சொல்ல மாட்டார். மறைவாக சொல்லி உள்ளார். ஆனால் அந்த பதிலை மக்கள் கவனிக்காமல்

போனார்கள். மேலும் அந்த பதில் யாருக்கும் தெரியாது மிக பெரிய ரகசியமான பதிலானது. “கடவுள் யார்?” என்ற கேள்விக்கு கடவுள் பலானவர் என்னும் பதில், ரகசியமாக இருப்பதினால் கடவுள் கூட ரகசியமானவர் என்று சொல்லலாம். கடவுள் ரகசியமானவரா? என்னும் கேள்வி கேட்டால் இல்லை அவர் புலப்படாமல் எல்லோருக்கும் நெருக்கமாக, எல்லோருக்கும் தெரியும்படி இருக்கிறார் என்று சொல்லலாம். கடவுள் ஓர் இடத்தில் ரகசியமாக இருக்கிறாரா? என்னும் கேள்வி கேட்டால் அதற்கு பதிலாக கடவுள் ஓர் இடத்தில் ரகசியமாக இல்லை, கடவுள் எல்லாம் இடத்தில் இருக்கின்றார். மேலும் அவரை பார்க்க முடியாமல் எங்கேயோ இருக்கிறார் என்னும், ரகசியமாக இருக்கின்றார் என்பது, ஓர் இடத்தில் இருக்கின்றார் என்பது, மனிதர்கள் தவறு தான் கடவுள் தவறு அல்ல. எப்படியாவது மனிதர்கள் அஞ்ஞானத்தினால் கடவுள் அனைத்திலும் இருக்கின்ற அவரை தெரிந்து கொள்ளாமல் கடவுள் இல்லை என்பவர் இருக்கின்றார்கள். அப்போது கடவுள் இருப்பதற்க்கே ஆபத்தாக இருப்பதினால், கடவுள் இருப்பவர் அல்ல இல்லாதவன் என்றும் சொல்லியதினால், கடவுள் தான் இருப்பதை தெரிவிப்பதற்கு, சுயமாக மனிதர்கள் கடவுளைப் பற்றி தெரிந்து கொள்ள தேவையான ஞானத்தை தெரிவிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். கடவுள் என்றால் தெரியாதவர், இல்லாதவர் என்பதை நீக்குவதற்கு கடவுள் மனிதர்களுக்கு தன்னை தெரியும் உபாயம் ஞானத்தை தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் தனக்கு மட்டும் சில தர்மங்களை வைத்துக்கொண்டு. தன் தர்மங்கள் பிரகாரம் இருக்க வேண்டும் என்பவர் கடவுள் ஆனதினால், அவர் நேராக அவர் மக்களிடம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. கடவுள் முக்கியமாக மூன்று தர்மங்களை அனுசரிகின்றார். உருவம், பெயர், வேலை, இல்லாதவராக இருக்கிறார். அந்த நடைமுறை பிரகாரம் கடவுளுக்கு பெயர் இல்லை உருவம் இல்லை, வேலை இல்லை. மனிதன் கடவுள் பார்த்து தெரிந்து கொள்ளுவதற்கு அவருக்கு உருவம் இல்லை. உருவம் இல்லாததினால் மனிதன் கடவுளை

பார்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. அப்படியே கடவுளுக்கு பெயரும் இல்லை அதனால் கடவுள் பலானவர் என்னும் சொல்லுவதற்கும் வாய்ப்பில்லை. முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால்! கடவுள் என்னும் வார்த்தை பெயர் அல்ல. கடவுள் தேடுபவர் என்றும் தெரிவதற்கு சொல்லும் வார்த்தையாக கணக்கிட வேண்டும். அப்படியே வேலை செய்யாதவர் கடவுள். அவர் எந்த காரியம் செய்யாதவர். அதனால் பலான வேலை செய்கின்றவர் கடவுள் என்றும் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லை. உருவம் பெயர் வேலை இல்லாதவர் கடவுள் ஆனதினால் அவரை யாரும் கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்பு இல்லை. யாரும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாததினால் அவரை எப்போதுமே தேடப்படுகின்றவர் தான், தெரிகின்றவர் அல்ல. அதனால் அவர் நிரந்தரமாக கடவுளாக இருந்து விட்டார்.

**கேள்வி:- கடவுள் வேலை செய்யாதவராக இருந்தால் உலகத்தை எப்படி உருவாக்கினார்? உலகத்தை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தா என்றும் கடவுளே சொல்லினார். தெய்வ கிரந்தத்தில் கடவுள் சிருஷ்டி கர்த்தா என்று சொல்லியுள்ளார். கடவுள் உலகத்தை உருவாக்கியதனால் கடவுள் வேலை செய்கின்றவராக இருக்கின்றார். அப்படிப்பட்ட போது கடவுளின் முக்கியமான தர்மங்களில் கடவுள் முக்கியமான வேலை செய்யாதவார் என்று சொல்வது அசத்தியம் அல்லவா? கடவுள் உருவாக்காமல் இந்த உலகம் எப்படி உருவானது? இதற்கு உங்கள் பதில் என்ன?**

**பதில்:-** கடவுள் "எந்த வேலையும் செய்கின்றவர் அல்ல" என்ற வார்த்தை உண்மைதான். அந்த விஷயம் மனிதர்களாக நமக்கு அர்த்தமாக வேண்டுமென்றால் முதலில் சிறிது தகவல்களை தெரிந்துக்கொள்ள வேண்டியது இருக்கும். அது என்னவென்றால்! முதலில் உலகம் இல்லாத நேரத்தில் கடவுள் ஒருவர் மட்டும் இருந்தார். கடவுள் தவிர, யாரும் எதுவும் இல்லாத நேரத்தில் உலகம் என்பதே இல்லை, உலகத்தில் மனிதர்கள், ஜீவராசிகள் எதுவுமில்லை. எது

ஆகாத நேரத்தில், எதுவும் இல்லாத நேரத்தில், கடவுள் உலகத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்தார். சிருஷ்டி பூர்வம் கடவுள் வேலையை செய்து உலகத்தை தயார் செய்தார். கடவுள் வேலை செய்ததினால் அந்த நாள் பிரக்ருதி (பஞ்சபூதம்) தயாரானது. பிரக்ருதி என்றால் ஐந்து பாகங்களாக இருக்கின்ற உலகம். ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி, என்றும் ஐந்து பாகங்களாக உலகம் இருக்கின்றது. உலகம் இல்லாத நேரத்தில் கடவுளுக்கு தர்மங்கள் இல்லை. கடவுள் என்றும் அழைக்கப்படுபவரும் யாரும் இல்லை. யாரும் இல்லாத காலத்தில் அவரை கடவுள் என்று அழைப்பவர் யாருமில்லை. கடவுள் சிருஷ்டி காரியங்கள் செய்தபிறகு இரண்டாவது காரியம் செய்யவில்லை. கடவுள் ஒருவரே ஆனதினால் அவர் சிருஷ்டி பூர்வத்தில் ஒரே ஒரு காரியத்தை மட்டும் செய்தார். ஒரு காரியம் செய்த பிறகு இரண்டாவது காரியம் செய்யவில்லை. சிருஷ்டி உருவாக்கிய பிறகு கடவுளுக்கு முக்கியமாக மூன்று தர்மங்கள் ஏற்பட்டது. அது உருவம், பெயர், வேலை, இல்லாதவர் என்பது. கடவுள் சிருஷ்டி உருவாக்குவதற்கு முன்பு வேலை செய்தார். அப்போது அவருக்கு எந்த தர்மங்கள் இல்லை. சிருஷ்டி உருவாக்கிய பிறகு தர்மங்கள் ஏற்பட்டதனால், சிருஷ்டி உருவாக்கிய பிறகு கடவுள் எந்த காரியமும் செய்யவில்லை. கடவுளுக்கு எந்த பெயரும் இல்லை. அவருக்கு எந்த உருவம் இல்லை. அதனால் அவரை யாரும் தெரிந்து கொள்ள முடியாது.

**கேள்வி:- இன்று எத்தனையோ பேர் இறந்து போகிறார்கள். எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள். கடவுள் சிருஷ்டி கர்த்தாவாகும் போது ஒவ்வொரு நாள் இறந்து போனவரை மறுபடியும் பிறக்க வைக்கும் காரியத்தை செய்கின்றார் அல்லவா! அனைத்து ஜீவராசிகளையும் சிருஷ்டி காரியத்தை எப்போதும் செய்கின்ற வரை காரியங்கள் செய்பவர் என்றும் சொல்லாமல், காரியங்கள் செய்யாதவர் என்றும் எப்படி சொல்ல வேண்டும்? அப்படி சொல்லும்போது அசத்தியத்தை**

**சொல்லியது போல் இருக்கும் அல்லவா? இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**பதில்:** என் பதில் தெரிவதற்கு முன்பு நீ என்னை தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கும். நான் சத்தியமே சொல்வேன் என்னும் என்னை நீ நம்பும்போது என் வார்த்தைகளை கேட்பாய், என்றால் என் வார்த்தையில் சத்தியம் இருக்கின்றது என்று தெரிந்து கொள்ளுவாய். நான் சொல்லும் வார்த்தை சாஸ்திரம் முறையாக உள்ளது என்று தெரியும். அதே எண்ணங்களிலிருந்து இப்போது நான் சொல்லிய வார்த்தை கேட்டால் உண்மையான பதில் தெரியும். மூன்று தெய்வ கிரந்தத்தில் தெய்வக் ஞானத்தையே சொல்கின்றேன் என்று உங்களுக்கு அர்த்தமாகும். “கடவுள்” என்றால் புனிதமான ஆத்மா என்னும் அழைக்கப்படும் பரமாத்மா உலகத்தை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தாவானவர், ஜீவராசிகளை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தா அல்ல. இன்று ஜீவராசிகளை உருவாக்குகின்ற சிருஷ்டி கர்த்தா வேறு. முதன் முதலில் உலகத்தை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தாவேறு. முதன் முதலில் உலகத்தை சிருஷ்டித்த உலகத்துக்கு கர்த்தாவான பரமாத்மா இரண்டாவது தடவை வேலை செய்யவில்லை. அந்த கணக்கு பிரகாரம் பரமாத்மா உயிரற்ற உலகத்தை உருவாக்கினார். அந்த கணக்கு பிரகாரம் முதலில் ஜீவராசிகள் இல்லாத உலகத்தை உருவாக்கினார். சிருஷ்டி பூர்வம் வேலைசெய்து பரமாத்மா இரண்டாவது தடவை தன் சிருஷ்டி பிறகு வேலையை செய்யாதவராக, ஜீவம் உருவமுள்ள உலகத்தை உருவாக்கியதினால் தன்னிலிருந்து ஆத்மாவை வெளியேற்றினார். தான் அனுப்பிய ஆத்மா ஜீவனுள்ள உலகத்தை தயார் செய்தது. தான் வேலை செய்யாமல் சர்வ ஜீவராசிகளை உருவாக்குவதற்காக ஆத்மாவை தன்னில் இருந்து வெளியே அனுப்பினார். ஜீவராசிகள் இல்லாத பிரக்ருதியை தயார் செய்த சிருஷ்டி கர்த்தா பரமாத்மா, ஜீவராசிகளுக்கு சிருஷ்டி கர்த்தா ஆத்மா என்று சொல்லலாம். இந்த விதமாக சிருஷ்டி கர்த்தா இருவர் என்னும், ஒருவர் உலகத்தை உருவாக்கி, மற்றொருவர்

ஜீவராசிகளை உருவாக்கினார். ஜீவராசிகளை உருவாக்கிட அதிகாரத்தை ஆத்மா பரமாத்மாவிடம் இருந்து அனுமதி பெற்றார். பரமாத்மா தந்தையாக, ஆத்மா பரமாத்மாவுக்கு மானச புத்திரனாக இருக்கின்றார். கடவுள் தன் விருப்பத்தால் ஆத்மாவை தயாராகும்படி செய்து, ஜீவம் உருவமான அனைத்து ஜீவராசிகளை ஆத்மாவினால் தயார் செய்யும்படி பரமாத்மா ஆத்மாவுக்கு அனைத்து அதிகாரங்களை கொடுத்தார். அப்போதிருந்து இன்றுவரை அனைத்து ஜீவராசிகளை ஆத்மாவே உருவாக்குகின்றது, பரமாத்மா எந்த வேலையும் செய்யவில்லை. பரமாத்மா சிருஷ்டி பூர்வம் வேலை செய்தார், சிருஷ்டி பிறகு வேலை செய்யவில்லை என்று சொல்லலாம். சிருஷ்டி பிறகு பரமாத்மா எந்த வேலை செய்யாமல் சும்மாவாக இருந்தார். ஆத்மா அனைத்துக் காரியங்கள் செய்கின்றார். அதனால் ஆத்மாவை 'காரியகர்த்தா' என்னும் சொல்லி, பரமாத்மாவை 'வேலை செய்யாதவர்' என்று கூறினார்.

**கேள்வி:- முதன்முதலில் சிருஷ்டி கர்த்தாவான பரமாத்மா உலகம் தயாரான பிறகு வேலை செய்யாதவராக இருந்து விட்டார் அல்லவா! எல்லா வேலையில் கடவுள் இடத்திலிருந்து ஆத்மா வேலை செய்கின்றது அல்லவா! அப்படி இருக்கும் போது பரமாத்மா தேவையே இல்லை அல்லவா! ஆத்மாவே அனைத்துக் காரியங்கள் செய்து கொண்டிருப்பதனால், எந்த காரியமும் பரமாத்மா செய்யாததினால், மனிதனுக்கு ஆத்மா தேவை இருக்கின்றது மேலும், பரமாத்மா தேவை இல்லை அல்லவா! அப்படிப்பட்ட பரமாத்மாவை நாம் சொல்லிக் கொள்ளுவது தேவை இல்லை அல்லவா! என்றும் சிலர் கேட்கலாம். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**பதில்:-** ஒரு வீட்டில் மகன், மகனுக்குத் தந்தை, தந்தைக்குத் தந்தை இருக்கின்றார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது மகன், தந்தை, தாத்தா, இருக்கிறார் என்பது தெரிகின்றது அல்லவா! குமாரன், தந்தை, தாத்தா, மூன்று

பேர் இருக்கும் போது தாத்தாவானவர் குடும்ப பொறுப்புகள் எல்லாம் தன் மகனுக்கு ஒப்பிட்டு, தாத்தா வேலை செய்யாமல் சும்மாவாக இருக்கின்றார். எப்போதாவது தேவைப்பட்டால் யோசனை சொல்லுவது தவிர எந்த வேலை செய்வது இல்லை. தாத்தா வேலை செய்யாதவர் என்னும் அவரை கௌரவிக்காமல் இருப்பாயா, சாப்பாடு அவருக்கு போடாமல் இருப்பாயா? வீட்டில் பெரியவரானதினால் அவரை கௌரவித்து தெரியாத விஷயங்களை கேட்டு, அவர் யோசனைகள் கொடுத்துக் கொண்டிருப்பார். தாத்தாவானவர் வேலை செய்யாமல், இருந்தாலும் பேரன் மற்றும் மகன் இருவர் தாத்தாவை பெரியதாக சொல்லிக்கொண்டு கௌரவிக்க வேண்டும் அல்லவா! அதே விதமாக மனிதனுக்கு தாத்தாவாக போலுள்ள பரமாத்மாவை மகனாக ஆத்மா, பேரனான ஜீவாத்மா அன்புடன் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கடவுளான பரமாத்மா என்பவர் இல்லாமல் வீட்டில் தாத்தா போல் கௌரவிக்கப்பட்டு, அவரை கடவுள் என்று சொல்லிக்கொண்டு, கடவுள் என்றும் பயம் கொண்டு இருக்கின்றார்கள்.

**கேள்வி:- ஒரு மனிதனுக்கு கடவுளான பரமாத்மா தாத்தாவானவர், ஆத்மா தந்தையானவர். உள்ளே ஞானம் பிரகாரம் பார்த்தால் மனிதனுக்கு தந்தை ஆத்மா, தாத்தா பரமாத்மா சொல்வது தவறக்கூடாது. ஆனால் மனிதன் அஞ்ஞானத்தில் இருந்து கொண்டு, கடவுள் என்னும் எண்ணங்களில் இருந்தாலும், கடவுள் என்றால் ஆத்மா அல்லது பரமாத்மாவை என்னும் தெரியாமல் ஆத்மாவை விட்டுவிட்டு பரமாத்மாவை கடவுள் என்று சொல்கின்றார்கள். வீட்டில் தந்தையிடம் பேசாமல், நேராக தாத்தாவிடம் பேசுவதனால் தந்தையை அவமானிப்பது போல் ஆகும் அல்லவா! அதே விதமாக மனிதர்கள் பரமாத்மாவை ஆராதனை செய்து, ஆத்மாவை சிறிதளவுகூட தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். எல்லாம் மதத்தில் உள்ளவர்கள் அப்படியே செய்கின்றார்கள். இந்த விஷயத்தில்**

**கடவுள் சொல்லிய ஞானம் பிரகாரம் பரமாத்மாவை ஆராதிக்க வேண்டுமா அல்லது ஆத்மாவை ஆராதிக்க வேண்டுமா?**

பதில்:- இந்த விஷயத்தில் பல பேர் தெரியாமல் குழப்பமாக இருக்கின்றார்கள். ஆனால் கடவுள் தன் கிரந்தமான இறுதி தெய்வ கிரந்தத்தில் **"ஆத்மாவை ஆராதியுங்கள், எனக்கு பயப்படுங்கள்"** என்று சொல்லினார். அதனால் பக்தி ஆத்மா மீது, பயம் பரமாத்மா மீது இருக்கவேண்டும் என்று தெரிகின்றது. அதே விஷயத்தை மற்ற இரண்டு கிரந்தங்களில் சொல்லியுள்ளார்கள். திவ்வித்திய தெய்வ கிரந்தத்தில் **"குமாரனை நம்பியவன் தந்தையை நம்பியது போலாகும்"** என்று சொல்லினார். யாரை ஆராதிக்க வேண்டும் என்னும் விஷயம் தெய்வ கிரந்தத்தில் சொல்லியுள்ளது, மனிதர்கள் மட்டும் தெய்வ கிரந்தத்தில் கடவுள் சொல்லியதை அனுசரிகாமல், தங்கள் சொந்த நிர்ணயத்தில் முன்னுக்குப் போகின்றார்கள். தாங்கள் செய்யும் பிரார்த்தனை யாருக்கு அடையுமோ தெரியாமல் தாங்கள் செய்வதே உண்மையான மார்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக சொல்லினால் மூன்று மதத்தில் உள்ளவர்கள் அனைவரும் கடவுள் சொல்லியது போல் ஆராதனை செய்வது இல்லை. மற்றும் ஆத்மாவை தாங்கள் கடவுள் என்னும் நினைக்காமல் நேராக பரமாத்மாவை ஆராதிக்கிறார்கள். உண்மைக்கு ஆத்மாவே கடவுள் என்றும், ஆத்மாவை ஆராதிக்க வேண்டும் என்று தெரியாதவர் இருக்கின்றார்கள். ஆத்மா தமக்கு ஆராதிக்க வேண்டிய கடவுள் என்னும், பரமாத்மாவை ஆராதிக்க கூடாது என்று, பரமாத்மா ஆராதிக்க வேண்டிய கடவுள் அல்ல என்றும், ஆத்மாவை ஆராதிக்க வேண்டும் என்று தெரியாதவர்கள் மூன்று மதத்திலும் இருக்கின்றார்கள். மனிதன் பக்தி எல்லாம் ஆத்மாவுக்கு செய்ய வேண்டியது இருக்கும். பரமாத்மா சாட்சி பூதமாக இருக்கின்றார் தவிர ஆராதனை வாங்கிக் கொள்வதாக இல்லை. மனிதன் பூமி மீது பிறந்ததிலிருந்து பசிக்கும்போது பாலுக்காக அழுவதற்கு ஆரம்பித்து, பெரியதான பிறகு வாழ்வதற்காக பணம் சம்பாதிப்பதற்கு

தவித்துக் கொண்டிருக்கிறார். நடக்கப்போகும் காலத்தில் இறந்துபோவோமா, வாழ்வோமா தெரியாமல் போய் வாழ்வேன் என்னும் நம்பிக்கையில் உலக மார்கத்தில் போய்க்கொண்டுடே இருக்கின்றான் தவிர தெய்வ மார்கத்தைப் பற்றி ஆலோசனை செய்யவில்லை. "நான்கு பேரில் நாராயணா" என்பதுபோல் பக்தி இல்லாமல் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டாவது தடவை கோயிலுக்கு போய் அல்லது போகாமலோ தீர்த யாத்திரை செய்து நான் பக்தியில் இருக்கின்றேன் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விதமாக தெய்வ மார்கத்தில் தவறி நடந்து கொண்டிருக்கின்ற எல்லோரும் தனக்குத் தானே ஞானிகளே என்றும் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தெய்வ மார்கத்தில் தவறி சமூகத்தில் தர்மங்கள் தெரியப்படுத்தி உண்மையான மார்க்கத்தில் நடப்பது போல் செய்வதற்கு, கடவுள் பூமி மீது மனிதன் போல் வந்து தன்னுடைய ஞானத்தை தானே சுயமாக தெரியப்படுத்த வேண்டியது இருக்கும். அதே விதமாக முதலில் கடவுள் மனிதன் போல வருவது, தெய்வ தர்மங்கள் தெரிவித்து போவது நடந்துகொண்டிருக்கின்றது. எப்போது பூமி மீது மனிதர்களில் தெய்வ ஞானம் இல்லாமல் போகும்போது, எப்போது தர்மங்கள் தெரியாமல் போய் அதர்ம காரியங்கள் வளர்கின்ற போது அப்போது கடவுள் தர்மங்களை தெரிவித்து மனிதர்களின் நடுவில் மனிதன் போல் வருவது நடக்கின்றது. ஆனால் முதலில் எத்தனையோ தடவை வந்து தன் ஞானத்தை சொல்லி போனதாக சில ஆதாரங்களினால் தெரிகின்றது. கடவுள் பூமி மீது மனிதன் போல் அவதரித்து வந்தால் அவரை யாரும் காண முடியாது. யாரும் காணமுடியாமல் பூமி மீது மனிதன் உருவத்தில் வந்து நடித்துக் கொண்டு போவார். கடவுள் மனிதன் போல் வந்தால் ஞானிகள் கூட அவரை அடையாளம் காண முடியாது. அப்படிப்பட்ட போது அஞ்ஞானிகளாக இருப்பவர்க்கு கடவுள் அவதார விஷயம் ஒன்றும் தெரியாது என்று சொல்லலாம். கடவுள் எத்தனை தடவை பூமி மீது மனிதனாக வந்தார் என்றும் சொல்ல முடியாது, சில தடவை வந்து போனார்

என்றும் சொல்லுவதற்கு சிறிதளவு ஆதாரம் உள்ளது. கடந்த நான்கு யுகத்தில் முதல் யுகம் குருதாயுகத்தில் ஆகாசத்திலிருந்து சூரியனுக்கு "ஜப்பரா" ஞானம் சொல்லி, சூரியன் சில காலத்திற்கு பூமி மீது "மனு" என்னும் நபருக்கு சொல்லி! மனுவினால் மற்ற ஒருவருக்கு, அவரினால் வேறு அவருக்கு ஞானம் தெரிந்து போய், சில ஆயிரம் வருஷங்களுக்கு பிறகு பூமி மீது அனைத்து ஞானம் பரவியது. இந்த விதமாக ஞானம் படிப்படியாக பரவி அப்படியே சில ஆயிரம் வருஷங்களுக்கு ஞானம் படிப்படியாக இல்லாமல் போனது. அப்படி சில நாடுகளில் தெய்வக் ஞானம் இல்லாமல் போன, பாரத நாட்டில் மட்டும் எல்லா நாடுகளில் போல் அஞ்ஞானம் பரவாமல் சம்பூர்ண ஞானம் இருந்தது. அதனால் பாரத நாட்டிற்கு குருதாயுகத்தில் "ஞானிகள் நாடு" என்று பெயர் வந்தது. ஞானிகள் நாடு என்னும் சொல்லுவதற்கு "இந்து நாடு" என்னும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படியே சில காலத்திற்கு இந்து நாடு என்னும் சொல்லாமல் 'இந்து' நாடு என்றும் சொல்லுவதற்கு பழகினார்கள். அப்படி குருதாயுகத்தில் வந்த பெயர் இப்போது கலியுகம் வரை இந்து நாடு என்னும் சொல்லி இந்த நடுவில் காலத்தில் கிட்டதட்ட 150 வருஷங்களுக்குப் பிறகு **"இந்து"** என்னும் வார்தை **"ஹிந்து"** என்றும் சொல்லாக மாறிப்போனது. தற்போது ஹிந்து நாடாக சொல்லப்படுகிறது. வரலாறு தெரியாதவர் அதே உண்மையான பெயரை சொல்லிக் கொண்டு தனக்குத்தானே ஹிந்துவாக அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்துபோன காலத்தில் 2000 வருஷம் பூர்வம் வரை பாரத நாட்டில் இந்து சமூகம் இருந்தது. அதுவரை பாரத நாட்டைச் சேர்ந்தவர் இந்துவாக சொல்லிக்கொண்டிருந்தார்கள். 2000 வருஷம் சமயத்தில் முதலில் கிறிஸ்துவ மதம் தயாராகி, அதுவரை மதம் என்னும் இல்லாமலிருந்த இந்து சமூகம் இந்து மதம் என்று சொல்லப்பட்டது. அதே இன்று ஹிந்து மதமாக நின்று இருக்கின்றது. கடந்து போன காலத்தில் இல்லாத மதங்கள் இன்று வளர்ந்து போய் இப்போதும் பூமி மீது 12 மதங்களாக

ஏற்பட்டு அதில் ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்துவ, மதங்கள் மூன்று முக்கியமானது. இன்று பூமி மீது பெரிய மதங்களாக இருக்கின்ற இந்த மூன்று மதங்கள் மட்டும்தான். இந்த மூன்று மதத்தில் தெய்வ ஞானம் மூன்று கிரந்தங்களாக சொல்லப்பட்டது. பூமி மீது மக்கள் நடுவில் தெய்வ தர்மங்கள் மூன்று தெய்வ கிரந்தமில் உருவத்தில் உள்ள மக்கள் மட்டும் தெய்வ ஞானத்தை சம்பூரணமாக தெரியாமல் இருக்கின்றார்கள். இன்று மூன்று தெய்வ கிரந்தங்களை மூன்று மதத்தைச் சேர்ந்தவர்கள் பிரித்துக் கொண்டது போல் பகவத் கீதை ஹிந்துக்கள் உடையது என்றும், பைபிள் கிறிஸ்துவர்கள் உடையது என்றும், குர்ஆன் கிரந்தம் முஸ்லிம்கள் உடையது என்றும், சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று யார் எப்படி சொல்லிக் கொண்டாலும் எங்களுக்கு தெரிந்தது வரை மூன்று தெய்வ கிரந்தத்தில் உள்ளது ஒன்று தான் என்று சொல்லலாம். முதல் பிறந்த கிரந்தத்தை பிரதம தெய்வ கிரந்தம் என்னும், பிறகு பிறந்த கிரந்தத்தை  தித்திவியா தெய்வ கிரந்தம் என்னும், அதன் பிறகு இறுதியாக பிறந்ததை இறுதி தெய்வ கிரந்தம் என்று சொல்கின்றார்கள். ஆனால் முதல் பிறந்ததை பிரதம  தெய்வ கிரந்தத்தில் உள்ள ஞானமே மற்ற இரண்டு கிரந்தத்திலும் உள்ளது. பகவத்கீதா பிரதம தெய்வ கிரந்தம் பகவத்கீதையில் உள்ள விஷயங்களே மற்ற இரண்டில் உள்ளது என்றும் மற்ற இரண்டு கிரந்தத்தில் இருக்கிறது என்றும் இறுதி தெய்வ கிரந்தத்தில் குர்ஆனில் சுறா (5) இல் 44, 46, 48, 68 ஆயத்தில் சாட்சியம் கொடுக்கின்றது. முதல் தயாரான பகவத்கீதையில் உள்ள ஞானத்தை ஸ்ரீகிருஷ்ணன் துவாபரயுகம் இறுதியில் சொல்லினார். துவாபரயுகத்தில் சொல்லிய பகவத்கீதையில் ஞான விஷயத்தை சூரியனுக்கு ஆகாசவாணியால் சொல்லிய “ஜப்பரா” ஞானமே ஆதாரம். ஆகாசவாணி முதலில் சூரியனுக்கு சொல்லி “ஜப்பர” என்னும் ஞானம் ஸ்ரீகிருஷ்ணரினால் சொல்லப்பட்டு கிரந்தம் வடிவத்தில் வந்தது. அதே ஞானம் பைபிள், குரானாக தயாரானது. இயேசு சொல்லியது ஞானம் பைபிள், ஜிப்ரயீல் என்னும் ஆகாச கிரகம் (சூரியன்) சொல்லிய ஞானம் குர்ஆனாக தயாரானது.

இதனைப் பொறுத்து ஒரே கடவுள் ஞானம்தான் மூன்று கிரந்தங்களில் சொல்லியதாக தெரிகின்றது. தெய்வ ஞானம் கிரந்த வடிவத்தில் இல்லாத காலத்தில் முதன் முதலில் கடவுள் மனிதனாக திரேதாயுகத்தில் வந்து தெய்வ தர்மங்களை தெரிவித்தார். கடவுள் மனிதனாக வந்தால் அவரை நாம் கடவுள் என்று சொல்லக்கூடாது. “பகவான்” என்னும் சொல்லவேண்டும் என்று முதலில் தெரிந்து கொண்டோம். பூமி மீது கடவுள் முதன் முதலில் மனிதனாக என்றால் பகவானாக வந்தது திரேதாயுகத்தில் என்று சொல்லலாம். முதலில் வந்த பகவானுக்கு முக்கியமானவராக இருப்பார். அவர் முதன் முதலில் வந்த பகவான் என்னும் சொல்வதற்கு அந்த முக்கியதுவமே ஆதாரம் என்று சொல்லலாம். அப்படியே பிறகு எத்தனை தடவை கடவுள் பகவானாக வந்தாலும் அவர் முதலில் பகவானுக்கு பிறகு வந்த பகவான் என்றும் தெரிவதற்கு கூட முக்கியமான அடையாளம் உள்ளது. கடவுள் மனிதனாக வந்ததினால் அவருக்கு மனிதர்களுக்கு உள்ளபடி பெயர் இருக்கும். உதாரணத்திற்கு கிருஷ்ணர் பகவானாக மேலும் “கிருஷ்ணா” என்னும் பெயர் வைக்கப்பட்டது. கடவுள் மனிதனாக முதலில் வந்த போது அவருக்கு பெயர் இருப்பது சகஜம்தான். ஆனால் அவர் பெயர் முன்பு பகவான் என்று சொல்லப்பட்டது. பிறகு வந்த பகவான் என்ற பெயர் பின்பு பகவான் என்று சொல்லப்பட்டது. கடந்து போன வரலாறை கவனித்தால் திரேதாயுகத்தில் முதன் முதலில் வந்த கடவுள் அவதாரம் முன்பு “பகவான்” என்று சொல்லப்பட்டது. பிறகு துவாபரயுகத்தில் வந்த கடவுள் அவதாரத்திற்கு பெயர் இறுதியில் என்றால் பெயர் பின்பு பகவான் என்று சொல்லினார். பகவான் மனிதனாக இருக்கின்ற கடவுளை தெரிவதற்கு கஷ்டமாகும். பகவானை தெரிந்துகொள்வது கடினமான வேலையாகும் அவர் முதலாவதானவரா பிறகு வந்தவரா என்னும், தெரிந்து சொல்லுவது மிக கடினமானது. கடவுள் பகவானாக இருக்கும்போது அவரை கண்டுபிடிக்க முடியாது என்று தெரிந்து போனது. ஆனால் கடவுள்

மனிதனாக பூமி மீது வந்து போன பிறகு அவரை ஞானம் தெரிந்தவர் மட்டுமே தெரிந்து கொள்ளுவார்கள். பலகோடி மனிதர்களில் சிலர் சம்பூர்ண ஞானம் தெரிந்தவர்கள் முதலில் வந்தவர் பகவான் என்றும் தெரிந்து சொல்லப்படுவார்கள். அப்படி சம்பூர்ண ஞானம் தெரிந்தவர்கள் துவாபரயுகத்தில் கிருஷ்ணனை தெரிந்து கொண்டார்கள். அந்த நாள் அவர் இருக்கும்போது கிருஷ்ணர் பலானவர் என்னும் தெரியவில்லை என்றாலும் அவர் போன பிறகு கிருஷ்ணர் சாதாரண மனிதன் அல்ல என்றும் அவர் பகவான் என்றும் இன்று சொல்லப்படுகின்றார். அதுவும் ஞானத்தில் முழுமையாக தெரிந்தவர்கள் மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் தவிற மற்ற மக்கள் யாரும் சொல்லவில்லை. இன்று அஞ்ஞானமாக இருக்கின்ற மக்கள் கிருஷ்ணனை சாதாரண மனிதனாக கணக்கிட்டு அவரை மாயக்காரன் என்னும் திருடன் என்றும் சொல்கின்றார்கள். கடவுள் பகவானாக மனிதன் அவதாரத்தில் வரும்போது அவர் சர்வ சாதாரணமான மனிதனாகவே மக்கள் நடுவில் காலம் நடத்திக் கொண்டு இருப்பார். கிருஷ்ணர் அப்படியே இருந்து தன் வாழ்க்கையில் வெறும் ஒரு சந்தர்ப்பத்தில் சம்பூர்ணமான ஞானத்தை பகவத்கீதையை சொல்லினார். ஒரு நாள் அதுவும் சில நிமிடங்கள் மட்டுமே ஞானம் சொல்லி மற்ற 126 வருஷங்கள் சாதாரண மனிதனாகவே மாயக்காரனாக, திருடனாக செய்த வேலை எல்லாருக்கும் தெரியும் படி, தான் பகவான் என்னும் யாரும் அவரை அடையாளம் காணமல் சென்றுவிட்டார். அதனால் யாரும் அவரை அடையாளிப்பதற்கு முடியாமல் போனது. ஞானிகளும் கிருஷ்ணனை அடையாளிக்காமல் போனார்கள். கிருஷ்ணர் பூமி மீது இருக்கும் நேரத்தில் கிருஷ்ணனை அடையாளிக்காமல் போனாலும் இன்று எங்கள் பார்வையில் கிருஷ்ணன் கடவுள் அவதாரம் பகவானாக தெரிந்தார். எனக்கு தெரியாதபோது ஞானம் தெரிந்தவர்களுக்கு தெரிந்ததினால் அவர் முதலில் கிருஷ்ணனை பகவான் என்னும் பெயரில் கூப்பிட்டு **"ஸ்ரீகிருஷ்ணபகவான்"** என்றும் சொல்லினார்கள். கிருஷ்ணன் பெயர் பின்பு பகவான் என்னும் சொல்வதினால் அவரைவிட முன்பு வந்த பகவான் இன்னொருவர்

இருக்கின்றார். முதல் முதலில் வந்த பகவானுக்கு பிறகு வந்த பகவான் கிருஷ்ணன் ஆனதினால் அவர் பெயர் பின்பு பகவான் என்னும் இருக்கின்றது என்று தெரிகின்றது. முதல் வந்த பகவான் யார்? என்னும் கேள்வி இதிலிருந்து வருகிறது. முதலில் பகவானைப் பற்றி தெரிவதற்கு முன்பு துவாபரயுகத்தில் வந்த பகவான் என்றால் கிருஷ்ணனைப் பற்றி சிறிது தெரிந்து கொள்ளலாம். கிருஷ்ணன் தன் வாழ்க்கையில் ஒரு தடவை ஆத்மா ஞானத்தை சொல்லி, தன்னை பற்றி "நான் கடவுள்" என்னும் தன் போதனையில் சொல்லிக்கொண்டார். என்னை கும்பிடுங்கள் என்னும் கூட சொல்லினார். பகவத் கீதா போதனையில் "நான் அனைத்து ஜீவராசிகளுக்கும் கடவுள் என்னும் மனிதன் அவதாரத்தில் மனிதன் நடுவில் வந்தேன். ஆனால் முட்டாள்களான மனிதர்கள் கண்மூடித்தனமாக என்னை அவமானிக்கின்றார்கள்" என்று சொல்லினார். இந்த விதமாக தன் உள்ளே உள்ள தெய்வத்தை அடையாளிக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் கிருஷ்ணன் நானே கடவுள் என்னும் சொல்லிக்கொண்டாலும் அஞ்ஞானிகள் அடையாளிக்காமல் போனார்கள். தாங்கள் அடையாளிக்காமல் போனாலும் அடையாளித்த ஞானிகள் இவரே பகவான் என்னும் கூறினாலும் கேட்காத மனிதர்கள் கிருஷ்ணன் மோசக்காரன் மாயக்காரன் திருடன் என்றும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். கிருஷ்ணன் பகவான் ஆனாலும் மக்கள் மட்டும் அவரை சாதாரண மனிதனாகவே கணக்கிடுகிறார்கள் தவிர வேறவராக பார்க்கவில்லை. கிருஷ்ணனே திரேதாயுகத்தில் ராமனாக பிறந்தார் என்றும் பலபேர் சாமிஜிகள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதன் பிரகாரம் மற்றவரெல்லாம் ராமன் கிருஷ்ணன் ஒன்றுதான் என்று சொல்கின்றார்கள். திரேதாயுகத்தில் ஸ்ரீராமன் சர்ச்சீலன். அவரது தன் வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர்த்துக் கொண்டார். **16** அல்லது **17** வருஷங்களுக்கு அரண்ய வாசத்திற்கு (காட்டுக்கு) போயினார். அப்போதிலிருந்து **14** வருடங்கள் வரை அரண்யவாசம் செய்தார். தனக்கு முப்பதாவது (30) வருடத்தில் ராவணனிடம் போர் செய்தார்.

பிறகு அயோத்தியாவிற்க்கு வந்து தன் மனைவியான சீதாவை அரண்யத்திற்கு அனுப்பினார் ராமன். பிறகு சீதா இல்லாமல் ஒருவராக வாழ்க்கை நடத்தினார். தனக்கு 46 வயது இருக்கும்போது தன் குமாரனான லவ, குச மற்றும் மனைவி சீதாவை சந்தித்தார். அப்போது சீதாவை மறுபடி அயோத்திக்கு வா என்னும் கூப்பிட்டபோது சீதா நான் வரமாட்டேன் என்று சொன்னார். பிறகு அவர் வாழ்க்கை மனைவி இல்லாமல் கவலையில் வாழ்கையை கடத்தினார். ஸ்ரீராமன் எங்கும் ஆத்மா ஞானத்தை சொல்லியதாக சரித்திரமில்லை. ராமன் ஞானத்தை சொல்லாமலே ராமனை கடவுள் என்னும் மக்கள் எல்லோரும் சொல்கின்றார்கள். ராமன் கிருஷ்ணன் இருவரும் ஒருவரே என்னும் சொல்லுபவர் ராமனை கடவுள் என்னும் சொல்லி கிருஷ்ணனை திருடன், மோசக்காரன், என்னும் சொல்லி பெண்கள் பின்பு திரிகின்றவர் என்றும் சொல்கின்றார்கள். ராமன் கடவுள் ஆகும்போது கிருஷ்ணன் கூட கடவுள் ஆகவேண்டும் அல்லவா! ராம ராமா கிருஷ்ணா கிருஷ்ணா என்னும் சொல்லி பாட்டுக்கள் பாடியவர் கூட ராமனை கடவுளாக செய்து கிருஷ்ணனை திருடனாக செய்தார்கள். திருடர்கள் எல்லாரும் கிருஷ்ணனை எங்கள் வேலை செய்கின்றவர் என்று சொல்கிறார்கள். ராமனை ஆகாசத்தின் மேல் உயரத்திற்கு எடுத்தவர் கிருஷ்ணனை மட்டும் முழுமையாக கீழே போடுவது போல் பேசுகின்றார்கள். இதுவரை கடவுள் பூமி மீது மனிதன் அவதாரத்தில் எத்தனை தடவை வந்தாரோ கட்சிதமாக யாரும் சொல்ல முடியாது. ஆனால் தெரிந்தவரை சாஸ்திரம் பிரகாரம் சொல்லினால் மூன்று தடவை வந்தார் என்று சொல்லலாம். இன்று எனக்கு பகவான் விஷயம் சிறிது தெரிந்தாலும் திரேதாயுகத்தில் பலான அவர் பகவான் என்னும், துவாபரயுகத்தில் பலான அவர் பகவான் என்னும், அப்படியே கலியுகத்தில் பலான அவர் பகவான் இருந்தார் என்றும் சத்தியத்தை சொல்வதற்கு கூட பயப்பட வேண்டியது இருக்கும். அப்படி எதற்கு பயப்பட வேண்டியது இருக்கும் என்றால் இன்று மக்கள் கடந்த காலத்தில் வந்த மூன்று பகவான் களை அடையாளிக்காமல் போனதினால் நீச்சர்களாக, கெட்டவராக, திருடர்களாக,

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர் யாரை கெட்டவராக சொல்லிக் கொண்டு இருக்கிறார்களோ அவரை நான் பகவான் என்னும் சொல்லினால் மக்கள் அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்கு முழுமையாக எதிராக சொல்லியது போல் இருக்கின்றது ஆகும். துவாபரயுகத்தில் உள்ள கிருஷ்ணன் திரேதாயுகத்தில் ஸ்ரீராமனாக இருந்தார் என்னும், பல பேர் சொல்லினாலும் இறுதிக்கு கிருஷ்ணனை கெட்டவனாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கலியுகத்தில் **2000** வருடத்திற்கு முன்பு கடவுள் பகவானாக வந்தார் என்னும், அப்படி வந்த பகவானே இயேசு என்னும் சொல்லினால் கிருஸ்துவர்கள் கூட சிலர் எதிர்ப்பு சொல்கிறார்கள். சிலர் மட்டும் நிஜம்தான் என்று சந்தோஷப் படுகின்றார்கள். வேறு மதத்தை சேர்ந்தவர்கள் முழுமையாக எதிர்ப்பு அளிக்கின்றார்கள். ஹிந்துக்கள் இயேசு பெயர் சொல்லினால் கோபமாக இருக்கின்றார்கள். அவர் தன் மதத்தை புகழ்த்திக்கு கொண்டு வேறு மதத்தை எதிர்ப்புக் கொண்டதினால் இயேசு என்னும் வார்த்தையை கேட்டால் அலர்ஜி வந்தவர் போல எதிர்ப்பு எண்ணங்களுடன் வெளிப்படுத்துகிறார்கள். இயேசு பகவான் என்றும் சொல்லினால் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மக்கள் பார்வைக்கு தெரிந்து தன்னை மக்களுக்கு தெரியும்போது தான் கடவுள் என்னும் சொல்லினால், மக்கள் அவரை ஒப்புக் கொள்ளாத போது நான் கடவுள் என்னும் சொல்லாதவன், மக்களில் முழுமையாக தவறானவன் என்னும் விளம்பரம் ஆனவன், நான் பகவான் என்னும் சொல்லினால் மக்கள் ஒப்புக் கொள்ளாத போது சொன்ன என்னையே பல இடஞ்சல் செய்கிறார்கள். நான் ஹிந்துவாக இருக்கும்போது அவர் என்னை ஹிந்து அல்ல வேறு மதத்தை சேர்ந்தவர் என்று சொல்கின்றார்கள். நான் ஞானத்தை சொல்லும்போது என்னை அஞ்ஞானியாக சொல்கின்றார்கள்.

**கேள்வி:- துவாபரயுகத்தில் கிருஷ்ணன் பகவான் என்று சிலர் சொல்லினார்கள். சொல்லிய வியாசன் பகவத்கீதையில் கிருஷ்ணனை பகவானாக சொல்லி பகவான் வார்த்தை**

**(பகவான்வாட்சா) என்று சொல்லி உள்ளார். அதனால் கிருஷ்ணன் பகவான் என்றும் சொல்வதற்கு சிறிது வாய்ப்பு இருந்தும் சிலர் ஹிந்துக்களே கிருஷ்ணனை கடவுளாக ஒப்புக்கொள்வதில்லை. இயேசு விஷயத்திற்கு வந்தால் நீங்கள் இயேசு பகவான் என்னும் சொல்லும் வார்த்தையை கிறிஸ்தவர்களே ஒப்புக்கொள்வதில்லை. இயேசு கடவுளின் குமாரன் என்னும் கடவுள் அல்ல என்றும் சொல்கின்றார்கள். இயேசு கடவுளின் குமாரன் ஆனதினால் மக்கள் கூட கடவுளின் குமாரன் ஆனதினால் மக்கள் இயேசுவை எங்கள் சகோதரனாக இருக்கின்றார் என்னும், கிறிஸ்தவர்கள் பலர் பேர் இப்படி சொல்கிறார்கள். சில பேர் மட்டும் உங்கள் வார்த்தையை சத்தியம் தான் என்று சொல்கின்றார்கள். மற்ற கிறிஸ்தவர் எல்லாம் இயேசுவை கடவுளின் குமாரனாக சொல்லிக்கொண்டு தவிர கடவுளாக ஒப்புக்கொள்வதில்லை. அப்படிப்பட்ட போது கிறிஸ்தவ மதத்திலேயே இயேசுவை பகவானாக ஒப்புக் கொள்ளாத போது, நீங்கள் சொல்லிய துவாபரயுகத்தில் உள்ள கிருஷ்ணனை, கலியுகத்தில் உள்ள இயேசுவை பகவானாக புரிந்து கொள்ளாத போது யாரும் இதுவரை திரேதாயுகத்தில் பகவான் வந்தார் என்று சொல்லிக் கொண்டால் யாரையோ நீங்கள் பகவானாக சொல்லினால் மக்கள் நம்புவார்களா?**

**பதில்:-** நம்பிக்கை என்பது முக்கியமானது அல்ல. நம்பிக்கை என்பது சத்தியம் ஆகலாம், அசத்தியமும் ஆகலாம். சிலர் நம்பினால் அது சத்தியம், நம்பாமல் போனால் அசத்தியம் என்றும் சொல்வதற்கு முடியாது. நம்பிக்கையைப் பொறுத்து சத்தியம் இருக்காது. அதனால் சிலர் பெரியவர்கள் இப்படி சொல்லினார்கள். **“அசத்தியத்தை ஆயிரம் பேர் சொல்லினாலும் அது சத்தியம் ஆகாது. சத்தியத்தை ஆயிரம்பேர் அல்லவென்று சொல்லினாலும் அது அசத்தியம் ஆகாது.”** இந்த வார்த்தையை பொருத்து மக்கள் நம்பிக்கை மீது சத்தியம் பொருத்து இல்லை. சத்தியத்தை யாரும் ஒப்புக்கொள்ளாமல் போனாலும் அது எப்போதும் சத்தியமாகவே இருக்கும் என்னும் அசத்தியம் மாறுவதற்கு

வாய்ப்பு இல்லை. கோழி முட்டையை கோழி முட்டை அல்ல என்னும் எத்தனையோ பெயர் சொல்லினாலும் அது கோழி முட்டை ஆகவே இருக்கும் தவிர பாம்பு முட்டை, வேறு பறவைகள் முட்டையாக மாறாது அல்லவா! அப்படியே மாட்டுப் பாலை சிலர்கள் தெரியாமல் கழுதைப்பால் என்னும் சொல்லினால் அது மாட்டுப்பால் என்பது தான் சத்தியமாகவே இருக்கும். அப்படியே கழுதைப் பாலை மாட்டுப்பால் என்னும் சொல்லினாலும் அது எப்போதும் மாட்டுப்பால் அல்ல. அதே விதமாக மக்கள் நம்பிக்கையை பொறுத்து உண்மை உண்மையாக ஆதாரப்பட்டு இருக்காது. இயேசுவை கடவுள் குமாரன் என்னும் தெய்வ கிரந்தத்தில் சொல்லியுள்ளார் என்னும் சிலர் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதன் பிரகாரம் இயேசு கடவுள் அல்ல என்று சிலர் சொல்கின்றார்கள். யார் இஷ்டம் அவருடையது, யார் நம்பிக்கை அவருடையது. இயேசுவை கடவுள் அல்ல என்றும் அவர் சொல்லியதினால் அவர் கடவுளாகாமல் போக மாட்டார். அப்படியே கிருஷ்ணனை பல பேர் அவர் வேலையை செய்தது பொருத்து மோசக்காரன் என்றும் சொல்லினார்கள். அப்படியே அவர் சொல்லிய ஞானத்தை பொருத்து அவரை கடவுளே என்னும் சொல்லலாம் அல்லவா! இயேசுவையும், துவாபரயுகத்தில் உள்ள கிருஷ்ணனையும் பகவானாக மக்கள் நம்பாமல் போனதினால் அவர்கள் இன்னொருவராக மாறுவதற்கு வாய்ப்பு இல்லை. திரேதாயுகத்தில் பகவானைப் பற்றி இதுவரை யாரும் சொல்லவில்லை, திரேதாயுகத்தில் ராமன் என்றால் தசரதன் மகனை மக்கள் கடவுள் என்று சொல்கிறார்கள். அவர் நம்பிக்கை அவருடையது. அவர் வார்த்தையை அல்லவென்று சொல்லினால், அவர் வார்த்தையை ஆமாம் என்னும் சொல்லினால், ராமன் ராமனாகவே இருப்பார். ராமன் கடவுள் ஆனால் அவர் கடவுளாகவே இருப்பார். ஒருவேளை அவர் கடவுள் அல்ல என்றால் கடவுள் ஆகாதவராகவே இருப்பார். அவ்வளவு தான் நம்முடைய நோக்கம் அங்கு ஒன்னும் வேலை செய்யாது. அதனால் பலபேர் ராமனை கடவுள் என்னும் சொல்லினால் நான் அல்லவென்று சொல்லவில்லை.

ராமன் கடவுளே ஆயிருக்கலாம். எல்லோரும் நம்பியது போல நான் கூட நம்புகிறேன். ராமன் இருக்கும் காலத்தில் ராமனுக்கு ஒரு எதிராளி இருந்தார். அவர் பெயர் ராவணப்பிரம்மா. ராவணப்பிரம்மா மஹா ஞானி, திரிகால ஞானி என்னும் சில ஞானிகள் சொல்லும் போது நான் கேட்டேன். ராவணன் அவ்வளவு பெரிய ஞானி ஆகும்போது ராமன் கடவுள் என்னும் தெரிந்துகொள்ளாமல் போனாரா? எந்த ஞானம் இல்லாத சாதாரண மனிதர்கள் கூட ராமன் கடவுள் என்னும் தெரிந்து சொல்லும்போது எவ்வளவோ ஞானம் தெரிந்த ராவணன் ராமனை எதற்கு அடையாளிக்காமல் போனார்? எத்தனையோ பேர் மக்கள் நம்பியபோது பிறகு அவர் எதற்கு நம்பவில்லை?

**கேள்வி:- ராவண பிரம்மா மஹா ஞானி என்றும் சிலர் சொல்லுவது நாங்கள் கூட கேட்டோம். அவ்வளவு பெரிய ஞானியாக இருக்கும்போது மக்களில் நல்லவராக கணக்கிட வில்லை. அதற்கு காரணம் எல்லோரும் ஒன்றே ஒன்று சொல்கிறார்கள். 'சீதாவை ராவணன் கடத்தப்பட்டார்' என்றும் சொல்கின்றார்கள். அப்போது அந்த வேலையை ராவணன் செய்யாமல் போனால் அவரை மக்களில் நல்லவராக அடைந்திருப்பாரோ என்னமோ?**

**பதில்:-** துவாபரயுகத்தில் உள்ள கிருஷ்ணன், கலியுகத்தில் உள்ள இயேசுவும் ராவணன் செய்ததுபோல வேருவர் மனைவிகளை கடத்தவில்லை அல்லவா! ஆனாலும் அவரை மக்கள் நல்லவராக சொல்லவில்லை. கிருஷ்ணனை, இயேசுவை கெட்டவர் ஆகவே தெரிவித்தார்கள் அல்லவா! ஏதோ ஒரு சாக்கில் நல்லவரை கூட கெட்டவராக சொல்வது பூமி மீது மக்களுக்கு பழக்கமாகிப் போனது. அப்படியே எந்த நல்ல வேலை செய்யாமல் சிலரை நல்லவராக சொல்லிக்கொண்டு இருப்பார்கள்.

**கேள்வி:- மக்களில் எத்தனையோ புத்திசாலிகள் இருக்கின்றார்கள் அல்லவா! அவரும் ராவணனை கெட்டவராக, ராமனை நல்லவராக**

**சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதில் சத்தியம் எந்த அளவு இருக்கிறது அசத்தியம் எந்த அளவு இருக்கிறது ஆலோசனை செய்து பார்த்தால் அவர் சத்தியத்தை விட அசத்தியமே சொல்கிறார்கள் என்று தெரிந்தது. மனிதர்களுக்கு ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. யாராவது ஒருவன் சிறிதாக தெரிந்தவனாக இருப்பவன் சொல்லினால் அது என்ன சொன்னாலும் நிஜம்தான் என்னும் நம்பி அவர் சொல்லிய விஷயத்தை மக்களுக்கும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். யாராவது தாங்கள் கேட்ட விஷயத்தை நிஜமா எந்த அளவுக்கு இருக்கிறது, பொய்யா எந்த அளவுக்கு இருக்கிறது என்றும் ஆலோசனை செய்ய மாட்டார்கள். ராவணன் சீதையை கொண்டு போனது உண்மைதான், ஆனால் சீதாவை அவர் எந்த நோக்கத்தில் கொண்டு போனார் என்னும் சிறிதளவு கூட ஆலோசனை செய்யவில்லை. வேறு ஒருவர் சொல்லி அதை நம்பி ராவணன் நல்லவன் அல்ல, சீதாவின் மீது காமத்தினால் சீதாவை கட்டாயப்படுத்தி கொண்டு போனார் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ராவணன் சீதா மீது கெட்ட நோக்கத்துடன் கொண்டு போனார இல்லையா? இல்லை என்றால் எந்த நோக்கத்துடன் கொண்டு போனார்? என்னும் கேள்வி இன்று எங்களுக்கு வந்தது. நான் மக்கள் வார்த்தை குருட்டுப் போல நம்பாமல் அதில் சத்தியம் இருக்கிறதா, அசத்தியம் இருக்கிறதா தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்தேன். நீங்கள் உள்ளது உள்ளதுபோல் சொல்லுவீர்கள் என்னும் நம்பிக்கையில் உள்ளது உள்ளபடி இந்த விஷயத்தை தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்?**

**பதில்:-** ராமன் கடவுள் என்னும், ராவணன் ராக்ஷஸன் என்னும் மக்கள் சொல்கின்றார்கள். ராக்ஷஸன் என்றால் தேவதைகளுக்கு எதிராக செய்பவன், கெட்டவன் என்னும் மக்களுடைய நோக்கம். பண்டிதர்களும் கூட முழுமையாக கெட்டவர் என்றும் சொல்லினார்கள். ராமனும் மனிதன் தான், ராவணனும் மனிதன் தான், ஆனால் ராமன் கடவுள் எப்படி ஆனார், ராவணன் எப்படி ராக்ஷஸன் ஆனாரோ எனக்கு

மட்டும் தெரியாது. வேறவரிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது கேட்டது சத்தியமா அசத்தியமா என்னும் யோசனை செய்து எல்லோரை போல பேசுவதற்கு என்னால் முடியாது. அதனால் நான் குருட்டு வாக்கில் எதுவும் சொல்ல மாட்டேன். ராமன், ராவணன் ஒரு காலத்தில் வசித்தவர்கள் என்பது உண்மைதான். கிருஷ்ணன் விஷயத்திற்கு வந்து பார்த்தால் மக்கள் பேசிய வார்த்தை நடந்த சந்தர்ப்பத்திற்க்கும் சம்மந்தம் இல்லாமல் இருக்கின்றது. கிருஷ்ணனை சிறியவனாக வரைபடத்தில் காண்பித்தார்கள். பிறகு அவர் எப்போதும் இளையவர் ஆகவே இருக்கின்றார் என்றும் காட்டினார்கள். கௌரவர்களுக்கு, பாண்டவர்களுக்கு நடந்த பாரத போரில் கிருஷ்ணன் வயது கிட்டத்தட்ட (96) வருஷங்கள். போர் நடந்த (30) வருஷங்களுக்கு அவர் இறந்து போனார். ஆனால் போர் நேரத்தில் கிருஷ்ணன் வரைபடத்தில் இளையவனாக இருப்பதை காண்பித்தாரகள். உண்மையாக முதுமையில் தேரை நடத்தினார் என்னும் சொல்லியதாக வரலாற்றில் உள்ளது அல்லவா, போர் நேரத்தில் கிருஷ்ணனை இளையவராக காட்டியது முழுமையாக அசத்தியத்தை காட்டியது அல்லவா! இந்த விதமாக எத்தனையோ விஷயங்களில் அசத்தியத்தை சிலர் எழுத்தாளர்கள், பண்டிதர்கள் பிரசாரம் செய்து அதைக் கேட்ட மக்களுக்கு புத்தியை இழந்தவராக அவர் வார்த்தை சத்தியம் தான் என்னும் நம்பி அதனை ஒவ்வொருவர் சொல்லிக்கொண்டு முழுமையாக அசத்தியம் பிரச்சாரம் நடந்ததுப்போனது. கிருஷ்ணன் விஷயத்திற்கு வந்து பார்த்தால் அவர் எந்த வயதில் இந்த வேலை செய்தார் என்னும் ஆலோசனை செய்யாமல் பிரச்சாரம் செய்தது போல, ராவணன் காலத்தில் ராவணனை எந்த வயதில் எந்த வேலை செய்தார் என்னும் தெரியாமலே எல்லா வேலையும் இளமை வயதில் இருக்கும் போது செய்தது போல எழுதுவது, வரைந்தது, சொல்லிக் கொள்ளுவதினால் ராவணன் விஷயத்தில் அசத்தியம் பிரச்சாரம் நடந்து போனது என்றும் தெரிந்தது. ராவணன் காலத்தில் சில நிகழ்வுகள் நடந்தது உண்மை தான். ஆனால்

அது ராவணனுக்கு எந்த வயதில் இருக்கும்போது நடந்தது என்னும் ஆலோசனை செய்யாமல் எல்லா வேலை ஒரே வயதில் செய்தது போல சொல்லிக்கொள்வது பெரிய தவறு. அதே தவறை எல்லோரும் சொல்லிக் கொண்டு, சிலர் “எது சத்தியம்?” என்னும் ஆலோசனை செய்யாமல் போவது மற்றும் பெரிய தவறானது. ராவணனுக்கு கெட்ட பெயர் வந்தது “சீதாவை கடத்தினார்” என்னும் நிகழ்வு தான். அந்த நிகழ்வு நடந்தது உண்மை தான். ஆனால் அவர் எந்த வயதில், எந்த நோக்கத்தில் அந்த வேலை செய்தார் என்னும் யாரும் சிறிதளவு கூட ஆலோசனை செய்யவில்லை. அதே விதமாக ‘சீதா சுயம்வரத்திற்கு ராவணன் போய் சிவதனுசை எடுக்காமல் அவமானம் பட்டார் என்றும்’ சொல்லுவது கூட முக்கியமாக கேட்கின்ற சமாச்சாரம் தான். ராவணன் சீதா சுயம்வரம் பிறகு **14** வருஷத்திற்கு சீதாவை தன்னுடைய விமானத்தில் கூட்டிட்டு போனார் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சீதா சுயம்வரத்திற்கு ஜனகன் பலபேர் கல்யாணமாகாத யுவராஜாகளுக்கு அல்லது ராஜகுமாரனுக்கு அழைப்பிதழ் அனுப்பட்டது. சகஜமாக எந்த தந்தையும், கல்யாணம் ஆனவனுக்கு தன்னுடைய மகளை கொடுத்து கல்யாணம் செய்யலாம் என்றும் நினைக்க மாட்டாரகள். அதனால் கல்யாணம் முடிந்த ராவணனுக்கு ஜனகன் சுயம்வரம் அனுப்பினார் என்பது முழுமையான போய் தான். சீதா சுயம்வரம் சமயத்தில் ராவணப்பிரம்மாவுக்கு கல்யாணமான மகன் இருக்கின்றான். ராவணன் மகனுக்கு மகன் இருக்கும்போது, ராவணன் தன் பேரனுடன், மகனுடன் லங்காவில் இருக்கின்றார். சீதா சுயம்வரம் சமயத்திற்கு ராவணனுக்கு வயது கிட்டதட்ட **85** வயது வருஷங்கள் இருக்கலாம். அந்த வயது உள்ளவருக்கு சீதா தந்தை ஜனகன் அழைப்பிதழ் அனுப்பினார் என்பது பொருத்தமற்றது நீங்கள் புத்தியை உபயோகித்து ஆலோசனை செய்யுங்கள். சிறிது புத்தியை உபயோகித்து பார்த்தால் ராவணன் சீதா சுயம்வரத்திற்கு போனார் என்பது முழுமையான அசத்தியம். அப்படியே ஜனகன் ராவணனுக்கு அழைப்பிதழ் அனுப்பினார்

என்பது முழுமையான அசத்தியம். அப்போது காலத்தில் கடலை தாண்டுவதற்கு எந்த வசதி இல்லை. ஒருவேளை ஜனகன் ராவணனுக்கு அழைப்பிதழ் அனுப்பினார் என்றால், அந்த வார்த்தையை எடுத்துக்கொண்டு கடலைத் தாண்டி கொடுப்பவர் யாரும் இல்லை. ஜனகன் அழைப்பிதழ் அனுப்பாமலும் அழைக்காத அழைப்புகளுக்கு வந்ததுபோல் ராவணனே சீதா சுயம்வரத்திற்கு தெரிந்துகொண்டு வந்தார் என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ராவணன் சீதாவை கல்யாணம் செய்துகொள்வதற்கு சீதாவின் மீது வியாமோகத்துடன் வந்தார் என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வந்தவர் சுயம்வரத்தில் சீதா எடுக்க முடிந்த சிவதனுஷ்வை எடுக்காமல் தனுஷ்வை தன் மீது போட்டுக்கொண்டு அவமானப்பட்டார் என்றும் சிலர் எழுத்தாளர்கள் ராமாயணத்தில் சொல்லி உள்ளார். ஆனால் எழுத்தாளர்கள் சத்தியத்தை எழுதினாரா? அசத்தியத்தை எழுதினாரா? என்னும் சிறிது புத்தியை கூர்மையாக பார்த்தால் ராவணன் சிவதனுசை எடுக்காமல் போனார் என்னும் சொல்வது முழுமையான அசத்தியமானது என்னும் தெரிகிறது. ராவணன் சிவதனுசை எடுக்காமல் போனார் என்னும் முழுமையான அசத்தியமான வார்த்தைக்கு இரண்டு ஆதாரங்கள் உள்ளது. சீதா சுயம்வரத்திற்கு முன் என்றால் கிட்டதட்ட சில வருஷங்கள் பூர்வம் ராவணன் கைலாச பருவத்திற்கு சிவன் தரிசனம் செய்வதற்கு போகும்போது கைலாசத்தை எடுத்து தன் தலை மீது வைத்துக் கொண்டதுபோல், அப்போது சிவனையும், சிவதனுசையும் எடுத்தது போல் எழுத்தாளர்கள் எழுதிய போது சீதா சுயம்வரத்தில் சிவதனுசை எடுக்கவில்லை என்பது சொல்லியது அசத்தியம் எழுதுவது போல் உள்ளது அல்லவா!? இரண்டாவது ஆதாரம் என்னவென்றால்! சீதா எடுத்த சிவதனுசை எடுக்காதவன் சீதாவை எடுத்து தன் விமானத்தில் எப்படி வைத்தார்? என்பது கேள்வியாக உள்ளது? சீதாவை எடுத்துக்கொண்டு போனார் என்பது சத்தியமானதினால் சிவதனுசை எடுக்கவில்லை என்பது, ராவணன் அவமானம் பட்டார் என்பது முழுமையாக

அசத்தியம். இது எல்லாம் கவனித்தால் ராவணனை கெட்டவராக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் நினைத்து சீதா சுயம்வரத்தில் ராவணன் பாத்திரம் எழுதினார் தவிர, அது எந்த அளவுக்கு சத்தியம் அல்ல என்பது தெரிந்து போகின்றது. ராவணனுக்கு முழுமையாக கெட்டபேர் கொண்டு வந்தது 'காட்டில் ராமன் இல்லாத சமயத்தில் சீதாவை ராவணன் கொண்டுபோய் லங்காவில் வைத்தார்' என்ற அந்த வார்த்தைக்கு வந்தால் அது நடந்தது உண்மை தான். ஆனால் ராவணன் எந்த சமயத்தில் அப்படி செய்தார்? எந்த வயதில் செய்தார்? எதற்காக செய்தார்? என்னும் யோசனை செய்யாமல் நடந்த காரியத்தை கெட்டதாக பிரச்சாரம் செய்தார்கள். ராவணன் மீது கோபத்தில் அந்த நாள் ராமாயணத்தை எழுதியவர் ராவணன் சீதாவை கொண்டு போனது முழுமையாக கெட்ட தாகவே வரைந்து எழுதினாரகள். அந்த நாள் ராவணன், ராமன் வசிக்கும் காட்டிற்கு வந்தது நிஜம் தான், ராவணன் மாறுவேஷத்தில் வரவில்லை. ராவணன் ராவணன் ஆகவே வந்தார். நான் ராவணன் பிரம்மா என்னும் சீதாவுக்கு தெரிவித்தார். சீதாவை தன் மகள் போல் லங்காவிற்கு வரவேற்றார். பிறகு ராமன் லங்காவுக்கு வருவார் என்னும் சொல்லி, சீதாவை ஒப்பிட்டு லங்காவுக்கு அழைத்து போனார். சீதா உயரத்தில் உள்ள விமானம் ஏற முடியாது என்னும் அவரைத் தொடாமல் அவர் நின்று கொண்டிருந்த மணப்பாறையுடன் தன் விமானத்தில் வைத்தார். அங்கிருந்து லங்காவுக்கு நேராக சென்றார். லங்காவில் சீதாவுக்கு எந்த கஷ்டம் இல்லாமல் அனைத்து வசதிகளுடன் அசோகவனத்தில் வைத்தார். சீதாவுக்கு சேவை செய்வதற்கு கிட்டதட்ட **20** பெண்களை வைத்தார். தன்னுடைய நகரத்தில் இருந்து கிட்டத்தட்ட **8** கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற அசோகவனத்திற்கு பத்து நாளைக்கு ஒரு தடவை குடும்பத்துடன் சென்று வருவார். அங்கு போன ராவணன் ஒரு அப்பாவை போல் சீதாவிடம் பேசுவார். ராவணன் மனைவி மண்டோதரி தேவி தன் கணவன் சீதாவை காட்டில் பார்க்க முடியாமல், அங்கு சீதாபட்ட கஷ்டத்தை பார்க்கமுடியாமல் சில காலமாவது தங்களிடம் சுகமாக

இருக்க வேண்டும் என்னும் லங்காவுக்கு அழைத்து வந்தார் என்றும் சொல்லினார். தன் மகள்ளிடம் பேசுவது போல பேசி அங்கு இருக்கின்ற சேவை செய்கின்ற பெண்களிடம் சீதாவுக்கு எந்த கஷ்டம் இல்லாமல், சிறிதளவு கூட தடை செய்யாமல் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி வந்தார். அதற்கு முன்பு காட்டில் கிடைத்த காய்கள், கிழங்குகள் தின்ற சீதா சில சமயத்தில் காய்களும் பூமிக்குள் கிடைக்கின்ற கிழங்குகள் மேலும் கிடைக்காத நாளில் எத்தனையோ நேரம் பட்டினியாக இருந்த சீதா, ராவணனிடம் இருக்கும்போது லங்காவில் வயிற்று நிறைவாக ருசியாக இருக்கின்ற ஆகாரம் தின்றார். ராவணனிடம் இருந்த பத்து மாதம் காலத்தில் சீதா எந்த நேரத்திலும் எந்த கஷ்டமும் படவில்லை. பிறந்த வீட்டில் இருக்கின்றது போல இருந்தது.

**கேள்வி:- நீங்கள் சொல்லி விஷயம் இதுவரை யாரும் சொல்லவில்லை. நீங்கள் சொல்கின்ற விஷயம் சிறிது வரை சத்தியமாகவே காணப்படுகின்றது. இதற்கு முன்பு நாங்கள் கேட்டதெல்லாம் அசத்தியம் என்று தோன்றுகிறது. ஆனால் நாங்கள் ஒரு கேள்வி நாங்கள் கேட்காமல் இருக்க மாட்டோம். ராவணன், ராமன் இல்லாத நேரத்தில் சீதாவை அழைத்துப் போவது எதற்கு?**

**பதில்:-** ராமனை எங்களுடைய லங்காவுக்கு சீதாவை அனுப்பு என்னும் கேட்டால் ராமன் சீதாவை அனுப்ப மாட்டார் என்னும் நோக்கத்துடன் ராமனுக்கு சொல்லாமல் ராவணன் சீதைவை லங்காவுக்கு அழைத்துச் சென்றார்.

**கேள்வி:- சீதாவின் மீது காமகுணத்துடன், சீதாவை அனுபவிக்க வேண்டும் என்னும் கெட்ட நோக்கத்துடன், ராவணன் திருடனாக வந்து வலுக்கட்டாயமாக சீதாவை கொண்டு போனார் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ராமாயணம் வரலாற்றிலும் அதே விதமாக எழுதினார்கள். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**பதில்:-** கேட்கின்ற கேள்வி எப்படியாவது கேட்கலாம். சொல்கின்ற பதில் சரியாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம். யாருடையது சிந்தனை அவருடையது தான் என்னும் அவர் கேள்வியை கேட்கலாம் அதற்கு நான் பதில் சொல்கிறேன். அந்த நாள் ராமாயணம் வரலாறை எழுதிய எழுத்தாளர்கள் முதலிலேயே இப்படித்தான் இருக்கவேண்டும் என்னும் ராமாயணத்தை எழுதினார்கள். ராவணனை கெட்டவராக வரைந்து மக்களில் கெட்டவராக காண்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் சத்தியத்தை அசத்தியமாக வரைந்து எழுதியதே ராமாயணம். ராமாயணம் என்னும் பெயரிலேயே அந்த விஷயம் தெரிகின்றது. **ராமா என்றால் அயோத்தியா ராமன் என்னும், அயணம் என்றால் ஒரு பக்கம் என்னும் சொல்லலாம். ராம+அயணம்= ராமா அயணம் என்றால் ராமன் பக்கம் சொல்லியது என்னும் அர்த்தம்.** என்றால் ராமனை நல்லவராக, ராமன் பக்கம் சொல்லியது என்று அர்த்தம். ராமனை நல்லவராக சொல்லினால் ராமனிடம் போர் செய்த ராவணனைப் பற்றி கெட்டவராக சொல்லினார்கள். சீதாவின் மீது கெட்ட நோக்கத்துடன் அவரை அனுபவிக்க வேண்டும் என்னும் லங்காவுக்கு சீதாவை அழைத்துச் சென்றார் என்று சொல்வது முழுமையான அசத்தியம் என்று சொல்லலாம். எதற்கு என்றால்! சீதாவை ராவணன் கொண்டு போகும்போது ராவணன் வயது கிட்டத்தட்ட 99 வருஷம். அந்த வயதில் அவருக்கு கெட்ட புத்தி, காம குணம் இருக்கின்றது என்று சொல்லிக் கொள்ளுவது முழுமையான அசத்தியம். சொல்லுபவர் எப்படியாவது சொல்லலாம். சொல்லுவதை கேட்கின்ற அவர்களுக்கு புத்தி கூர்மையாக இருக்க வேண்டும். ராவணன் மகா பலசாலி ஆனதினால் சீதா உயரம் கொண்ட புஷ்பக விமானம் ஏறாமல் போனால், சீதாவுக்கு விமானத்தில் ஏறுவதற்கு சிரமமில்லாமல் மண் பாறை உடன் எடுத்து விமானத்தில் வைத்தார். அதனைக் கூட கெட்டதாக வரைந்து சீதாவை தொட்டால் ராவணன் இறந்து விடுவான் என்னும், எரிந்து போவான் என்னும் சீதாவை தொடாமல் மண்

பாறையுடன் எடுத்துக்கொண்டு போனார் என்னும் சொல்லிக் கொண்டார்கள். ராவணன் சீதாவை தொட்டால் எரிந்து போவான் என்னும்போது சீதாவை அனுபவிக்க வேண்டும் என்னும் எப்படி எடுத்துச் செல்வார்? என்னும் கேள்விக்கு யாரும் பதில் சொல்ல முடியாது. ராவணன் சீதாவை லங்காவுக்கு அழைத்து வருவேன் என்னும் தன் மனைவியான மண்டோதரி தேவிக்கு முதலிலேயே சொல்லி விட்டு வந்தார். தன்னுடைய இறப்பு ராமன் கையில் நடக்க வேண்டும் என்னும் தன்னுடைய மரணம் கண்டிப்பாக 100 வருடங்களுக்கு லங்காவிலேயே நடக்கும் என்னும், தான் சாமானியமாணவன் என்னும் எல்லோருக்கும் தெரியும்படி, ராமன் கையில் தன்னுடைய மரணம் நடக்கும் என்னும் முதலிலேயே தன் மனைவிக்குச் சொல்லினார். ராவணன் தன்னுடைய கையில் இறந்துவிடுவான் என்னும் ராமனுக்கு தெரியாது மேலும், ராமன் கையில் இறந்து விடுவேன் என்றும் முதலிலேயே ராவணனுக்கு தெரியும். மேலும் தன் ராவண ஜென்மம் பிறகு வரும், மற்ற இரண்டு ஜென்மங்கள் ரத்தம் வழிந்து இறந்துவிட வேண்டும் என்று உள்ளது. அதனால் தன் முதல் ஜென்மமான ராவணன் ஜென்மம் கூட ரத்தம் ஒழுகியே நடந்தது, அதனை அனுசரித்து அதன் போலவே ஆயுதத்தினால் ரத்தம் ஒழுகி மற்ற இரண்டு ஜென்மங்கள் கூட மரணம் அடைய வேண்டியது இருக்கும். அதனால் ராமன் போட்ட அம்பில் குத்திக்கொண்டு, ரத்தம் வெளியேறியதால் இறந்து போவேன் என்னும் திரிகாலஞானியான ராவணன் நடக்கப்போகும் சமாச்சாரத்தை முதலிலேயே தன் மனைவிக்கு சொல்லினார்.

**கேள்வி:- இந்த விஷயம் ராமாயணத்தில் எங்கும் எழுதவில்லையே?**

**பதில்:-** ராவணனை கெட்டதாக சொல்லுவதே இராமாயணம் (ராமன் பக்கம்) நோக்கத்துடன் நடந்த சத்தியத்தை எப்படி சொல்லுவார்கள்.? சத்தியத்தை அசத்தியமாக சொல்லுவதே இராமாயணம். அதில் ராவண ஆயணம் சிறிதும் இல்லை.

அதனால் ராவணனைப் பற்றி சொல்லியது அசத்தியம் தான் அதில் உள்ளது. நன்றாக அர்த்தமாக வேண்டும் என்றால் இராமாயணத்தைப் பற்றி மற்றொரு ஒரு தடவை சொல்கிறேன் கேளுங்கள். உத்தராயணம், தக்ஷிணாயணம் ராமாயணம் உள்ளது. “ஆயணம்” என்றால் “ஒரு பக்கம்” என்று அர்த்தம் சொல்லிக் கொண்டோம். உத்தராயணம் என்றால் உத்தரம் (வடக்கு திசை) என்னும், தக்ஷிணாயனம் (தெற்கு திசை) என்றால் தக்ஷிணம் பக்கம் என்று சொல்லலாம். சூரியன் வடக்கு திசையில் இருக்கும் போது உத்தராயணம் என்னும், சூரியன் தெற்கு திசையில் இருக்கும் போது தக்ஷிணாயனம் என்னும் சொல்லுவது போல, எழுதியவன் ராமன் பக்கம் இருக்கின்றவன் என்னும் ராமனை நல்லவராக சொல்லி, ராமன் பக்கம் கிரந்தத்தில் எழுதி சொல்லி “ராமாயணம்” என்று சொல்ல வேண்டும். ராமாயணம் ஒரு பக்கமே புகழ்தியது தவிர இரண்டு பக்கமும் சமமாக உள்ளது உள்ளபடி எழுதவில்லை. ராவணன் எத்தனையோ புகழான பெரிய வேலை செய்தாலும் அதை எல்லாம் கெட்ட வேலையாக எழுதி, ராமன் செய்த வேலை மட்டும் புகழ்த்தி எழுதுவதை நாளை யாராவது தவறாக சொல்லுவார்கள் என்னும் முதலிலேயே நாங்கள் ராமனுடைய பக்கமே நாங்கள் எழுதினோம் என்னும் சொல்லியது போல கிரந்தம் உடைய பெயர் “இராமாயணமாக” வைத்தார்கள். இது வரை இராமாயணம் கிரந்தத்தில் இவ்வளவு ரகசியம் இருக்கின்றது என்று யாருக்கும் தெரியாது. ராவணன் எந்த நல்ல வேலை செய்தாலும் அது கெட்டதாக, அப்படியே ராமன் எந்த கெட்ட வேலை செய்தாலும் அதனை நல்லதாக விவரித்து சொல்லியது இராமாயணம். சூரியனுக்கு வடக்கு, தெற்கு இரண்டும் சமமானது. அதனால் உத்தராயணத்தில் சிறிதுகாலம், பிறகு தக்ஷிணாயனத்தில் சிறிதுகாலம் இருக்கின்றார். சூரியன் உத்தராயணத்தில் இருக்கும்போது தக்ஷிணாயத்தை கெட்டது என்று சொல்லவில்லை. தக்ஷிணம் பக்கம் போகாமல் இருக்கவில்லை. அப்படியே ராமன் பக்கம் கிரந்தம் எழுதியவர் சொல்லியபோது ராமனைப்

பற்றி நல்ல விஷயம் மட்டும் சொல்லி ராவணன் கெட்ட விஷயங்களாக சொல்லியதனால் இராமாயணம் ஒரு பக்கமாக சொல்லியது தவிர உள்ளதுவுள்ளபடி எழுதவில்லை. ராமனை கடவுளாக வர்ணித்து சொன்னார்கள். அதற்கு யாரும் அல்ல என்று சொல்லவில்லை. அதுவரை நிறுத்திவிடாமல் ராவணனை ராக்ஷஸனாக வர்ணித்து சொல்லினார்கள். ராவணனைப் பற்றி அப்படி சொல்ல வேண்டிய தேவை இல்லை, ஆனால் ராவணனை கெட்டவராக, ராமனை நல்லவராக சொல்லயதினால் ஒரு பக்கம் புகழ்தியது தவிற வேறு இல்லாததினால் கிரந்தம் பெயர் இராமாயணமாக சொன்னார்கள். நாங்கள் ராமனை கெட்டவராக சொல்லாமல் எல்லோரும் ராமனை கடவுள் என்பதை அல்ல வென்று சொல்லாமல், ராவணனை பற்றி மட்டும் எழுதுகிறோம். உண்மை உண்மைகள் மட்டும் தெரிவிப்பதற்கு இந்த கிரந்தம் எழுதுகிறோம். மேலும் வேறு யாருக்கும் தெரியாத எத்தனையோ விஷயங்கள் நாங்கள் சொல்ல வேண்டியதை தெரிவித்தோம். ராவணன் தன் மரணத்தைப் பற்றி முதலிலேயே தெரிவித்தார். மேலும் தன்னுடைய ஆயுள் நூறு வருடங்கள் தான் என்றும் கூட சொல்லினார். இது யாருக்கும் தெரியாத விஷயம். அதனால் நான் அந்த விஷயத்தை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டியது இருக்கும். யாருக்கும் தெரியாத விஷயம் இருந்தால் தான் நான் கிரந்தம் எழுதுவேன், தெரிந்த விஷயங்கள் இருந்தால் நான் முக்கியமாக ராவணனைப் பற்றி கிரந்தம் எழுதவேண்டிய தேவை இல்லை. நான் எழுதப்பட்ட ஒவ்வொரு கிரந்தங்கள் சிறிது தனித்துவமாக, யாருக்கும் தெரியாத விஷயம் புதிய விஷயங்கள் சொல்லுவேன். அதனால் சீதா விஷயத்திலும், ராவணன் விஷயத்திலும் இதுவரை யாருக்கும் தெரியாத புதிய கோணங்களில் தெரிவிக்கிறேன். அந்த முறை பிரகாரம் **“ராவணன் மரணம்”** முழுமையான தனித்துவமாக உள்ளது. ராவணன் திரேதாயுகத்தில் மற்றும் துவாபரயுகத்தில் கலியுகத்தில் பிறக்க வேண்டியது இருக்கும். அப்படிப் பிறக்கும்போது அவர் மரணம் துவாபர, கலியுகத்திலும் தனித்துவமாக உள்ளது. ராவணன் இறந்த பிறகு பிறப்பார்

என்னும் சொல்லுவது எல்லோருக்கும் புதியதாக இருக்கும், எங்கள் வார்த்தை நூற்றுக்கு நூறு தடவை சத்தியம் தான்.

**கேள்வி:- ராமன் கடவுள் ஆனதினால் அவர் பிறகு யுகத்தில் பிறப்பார். ராவணன் பிறகு அவதரிப்பார் என்பது எங்களுக்கு அசத்தியமாக தெரிகிறது. ராமன் பிறகு ஜென்மத்தில் கிருஷ்ணனாக பிறந்தார் என்னும் எல்லோரும் சொல்லிக் கொண்டுயிருக்கிறார்கள். துவாபரயுகத்தில் கிருஷ்ணனாக பிறந்த ராமன், கலியுகத்தில் கல்கி பகவானாக பிறப்பார் என்னும் புராணத்தில் சொல்லி உள்ளார்கள். விஷ்ணு தசாவதாரத்தில் ராமன், கிருஷ்ணன், கல்கி என்னும் புராணத்தில் சொல்லி உள்ளார்கள். அதனால் ராமன் துவாபரயுகத்தில் கிருஷ்ணனாக பிறந்தார் என்னும்,கலியுகத்தில் கல்கியாக பிறப்பார் என்றும் நாங்கள் கேட்டோம். மேலும் ராவணன் துவாபர, கலியுகத்தில் பிறப்பார் என்பதை, நீங்கள் தவிர வேறு யாரும் சொல்லவில்லை. எந்த கிரந்தத்திலேயும் எழுதவில்லை. உங்கள் வார்த்தையை நாங்கள் என் நம்ப வேண்டும்?**

**பதில்:-** நான் என் வார்த்தையை நம்ப வேண்டும் என்று நான் எங்கும் சொல்லவில்லை. யார் நம்பினாலும், யார் நம்பாமல் போனாலும் சத்தியத்தை சொல்ல வேண்டும் என்றும் சொல்லி நடந்த சத்தியத்தை தெரிவித்தேன். கடந்து போன காலத்திலும் யார் கற்பனைக்கு எட்டாத சில தெய்வ ரகசியங்களும் கூட தெரிவித்தேன். எங்கள் ரசனையில் **"கிருஷ்ணமூசா"** கிரந்தத்தில் எத்தனையோ பிரம்மா (பெரிய) ரகசியங்களை தெரிவித்தோம். நீங்கள் விஷ்ணுவை பற்றி தசாவதாரங்கள் தெரிவித்தீர்கள். நான் கடவுளைப்பற்றிய அவதாரங்களை தெரிவிக்கின்றேன். கடவுளுக்கு எத்தனையோ அவதாரங்கள் என்னும் முதலில் சொல்லுவதற்கு முடியாது. எதற்கு என்றால்! கடவுள் பூமி மீது தர்மங்களுக்கு ஆபத்து ஏற்படும் போது மட்டும் அவதரிப்பார். அதனால் கடவுளுக்கு இத்தனை அவதாரங்கள் என்று சொல்ல முடியாது.

**கேள்வி:- ராவணன் தன் தங்கை சூர்ப்பன அக்காவுக்கு மூக்கு, காது அறுத்து, அவமதித்ததற்காக சீதாவை ராவணன் லங்காவுக்கு அழைத்து சென்றார் என்னும் சிலர் சொல்கிறார்கள். அந்த வார்த்தை உண்மையா இல்லையா?**

அல்ல. சாக்ஷாத்து கடவுள் அவதாரமான **“பகவான் அவதாரம்”** என்னும் இன்று தெரிந்து கொண்டோம். முதலில் மோட்சம் அடைந்த ஜனகன், கிருஷ்ணன் பகவத்கீதையில் உதாரணமாக சொல்லினார். துவாபரயுகத்தில் ஜனகன் பற்றி சொல்லினார் என்றால், துவாபரயுகம் கடைசிவரை மோக்ஷம் அடைந்தவர் ஒரு ஜனகன் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்லலாம். திரேதாயுகத்தில் ஜனகன் மோட்சம் அடைவதற்கு காரணம், அந்த நாள் ஞானம் சொல்லியது ராவணப்பிரம்மா தான் என்று சொல்லலாம். ராமன் பக்கம் எழுதிய ராமாயணத்தில் ராவணன் விஷயத்தை எத்தனையோ தெரியாமல் செய்ததினால், எழுதிய சமாச்சாரத்தை தவறாக எழுதியதினால் ராவணப்பிரம்மா விஷயம் யாருக்கும் தெரியாமல் போனது. அதனால் ராவணன் லங்காவில் **“சாம்ராஜ்ய சக்கரவர்த்தி, ஆத்மா ஞானம் தெரிந்த நபர் என்னும், தெய்வ தர்மங்களை தெரிவித்த குரு என்னும், சாக்ஷாத் பகவான் என்னும்”** விஷயம் பல பேருக்கு தெரியாது. ராவணப்பிரம்மா திரேதாயுகத்தில் பிறந்தார். குருதாயுகத்தில் மக்கள் எல்லோருக்கும் ஞானம் தெரிந்தது. குருதாயுகம் இறுதியில் மக்களில் தெய்வ ஞானம் இல்லாமல் போவதற்கு ஆரம்பித்தது. **“எப்போது தர்மங்கள் இல்லாமல் போகும்போது அதர்மங்கள் பெருகி வரும்போது அப்போது நான் அவதரிப்பேன்”** என்னும் பகவத்கீதையில் சொல்லியது போல் கடவுள் மனிதனாக பிறக்கின்ற வேலை ஏற்பட்டது. மனிதனாகப் பிறந்த கடவுள் யார் என்னும் யாருக்கும் தெரியாது. எப்போது கடவுள் பகவானாக பிறந்தாலும் அவர் பலானவர் என்றும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் எங்கு தர்மங்கள் தெரிகின்றதோ அங்கு பகவான் இருக்கின்றார் என்றும் அடையாளிக்கலாம். ஆனால் அவர் சொல்லிய தர்மங்கள் அர்த்தம் ஆகுவதற்கு எத்தனையோ வருடங்கள் ஆகும். மனிதன் உருவத்தில் உள்ள பகவான் சொல்லிய தர்மங்கள் பிரச்சாரம் ஆகுவதற்கு சில வருடங்கள் ஆகும். அது பிரச்சாரமான பிறகு அது அர்த்தம் ஆகுவதற்கு சில வருடங்கள் ஆகும். அதற்குள் வந்த பகவான் ஜென்மம்

எடுத்து போய்விடுவார். அதனால் பகவான் வாழ்ந்திருக்கும் போது அவரை யாரும் தெரிந்து கொள்ள முடியாது. பகவான் தர்மங்களினால் மற்றொரு விதத்தினால் தெரிந்துக்கொள்ளலாம். **"யார் பிரக்ருதியை ஆளக்கூடிய சக்தி யாருக்கு இருகிறதோ"** அவர் தான் பகவான் என்றும் உடனே தெரிந்து கொள்ளலாம். ஆனால் கடவுள் அவதாரத்தை மக்கள் அடையாளிக்காத நிலைமையில் உள்ளார்கள். துவாபரயுகத்தில் கிருஷ்ணன் விஷயத்திலும் அது தான் நடந்தது. கலியுகத்தில் இயேசு விஷயத்திலும் அதுதான் நடந்தது. கிருஷ்ணன், இயேசுவை எந்த அளவும் பகவானாக இப்போதும் கூட ஒப்புக் கொள்ளதவர்களும் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டபோது திரேதாயுகத்தில் இருந்த ராவணப்பிரம்மாவை கெட்டவராக சொல்கின்றார்கள், அவரை கடவுள் அவதாரமாக அடையாளிக்காமல் போனார்கள். கடவுள் அவதாரம் கொண்ட பகவான் பூமி மீது வந்தால் தன்னுடைய தர்மங்களை தெரிவிப்பார். துவாபர, கலியுகத்தில் அந்த விதமாக நடந்து, திரேதாயுகத்தில் ராவணப்பிரம்மா தர்மங்களை தெரிவித்து, மற்றும் அதர்மங்களை அனுசரிக்கின்ற வரை தண்டனை கொடுப்பதும் நடந்தது. திரேதாயுகத்தில் பாரத நாட்டில் தெற்கு பூமி பாகத்தில் சிறிது தெய்வ ஞானம் இருந்தது. அப்படி இருப்பதற்கு காரணம் தெற்கு பூமி பாகத்தில் ஸ்ரீலங்காவுக்கு ஒட்டிக்கொண்டு இருந்ததினால் அப்படி சொல்லலாம். ஸ்ரீலங்காவில் ராவணன் இருந்ததினால் அங்கு அதர்மங்கள் முறை இல்லாததினால் எல்லோரும் தர்மத்தை அனுசரிக்கபட்டார்கள். பாரத நாட்டில் தெற்குப் பகுதியில் சிறிது தர்மம் முறை இருந்தாலும் சிறிது அதர்மம் அனுசரித்து இருந்தார்கள். வடக்கு பூமி பாகத்தில் அதிகமாக அதர்மம் அனுசரித்து இருந்தார்கள். ஸ்ரீலங்காவுக்கு நெருங்கி இருந்த தெற்கு பாரத நாட்டில் அங்கு அங்கு சில இடத்தில் மட்டும் நடக்கும் அதர்மம் அனுசரிகின்ற வரை ராவணப்பிரம்மா தன்னுடைய படையினால் தடை செய்து வந்தார். தன்னுடைய பூமி பாகத்தில் தன்னுடைய ராஜ்ஜியத்திற்கு பக்கத்தில் உள்ள பகுதி இருந்ததினால் அங்கு கூட தனக்குத் தெரிந்த அதர்மங்களை நடக்க

விடாமல் தடுத்தார். அதர்மங்கள் செய்ய பழக்கப்பட்டவர்களுக்கு ராவணப்பிரம்மா செய்வது கெட்டதாக தெரிந்தது. அங்கு ராவணப்பிரம்மா கெட்டவராக மக்கள் சொல்வதற்கு ஆரம்பித்தார்கள். அதர்மங்கள் முறைகளை நடக்க விடாமல் தடுத்து நிறுத்தியதால் அதர்மங்கள் நல்லவிதமாக தெரிந்தவர்களுக்கு ராவணப்பிரம்மா கெட்டவராக தெரிந்தார். தெய்வ ஞானம் தெரியாதபோது எது தர்மமோ, எது அதர்மமோ தெரியாமல் அதர்மங்களை தர்மங்களாக நினைத்துக் கொண்டார்கள். அதர்மங்களை பக்தி மார்கம் என்று நினைத்து அனுசரிப்பார்கள். பகவத்கீதையில் இந்த காரியத்தினால் கடவுள் தெரியமாட்டார் என்னும் சொல்லினாளும் நான்கு காரியத்தை நான்கு அதர்மமாக சொல்லலாம். பகவத்கீதையில் பகவானான கிருஷ்ணன் மூன்று யோகத்தை தெரிவித்து அவற்றை தர்மங்களாக சொல்லினார். தர்மத்தினால் கடவுள் தெரிவார் என்று சொன்னார். இதனைப் பொறுத்து கடவுள் தெரியமாட்டார் என்னும் சொல்லிய நான்கு காரியங்களை அதர்மமாக சொல்லிக் கொள்ள வேண்டும். **1) பிரம்மயோகம், 2) கர்மயோகம், 3) பக்தியோகம்** என்னும் மூன்று யோகம் கடவுளிடம் சேற்றும் காரியமனாதினால் அவற்றை தர்மங்கள் என்று சொல்கின்றோம். இதன் பிரகாரம் தர்மங்கள் மூன்று என்று சொல்லலாம். அதர்மங்கள் நான்கு என்னும் அது 1) எக்னங்கள் 2) வேதங்கள் 3) தானம் 4) தபசுவாக இருக்கின்றது என்று சொல்லலாம். குருதாயுகம் கடைசியில் இருந்து முதலான நான்கு அதர்மங்கள் மேலும், திரேதாயுகம், துவாபரயுகம் தாண்டி கலியுகத்தில் நுழைந்த பின் ஐந்தாவது அதர்மமும் சேர்ந்து போனது. இப்போதும் பூமி மீது ஐந்து அதர்மங்கள் ஏற்பட்டது. “மதம்” என்பது மனிதர்கள் நடுவில் ஏற்பட்டு எல்லாத்தை விட பெரிய அதர்மமாக தயாரானது. மற்ற நான்கு அதர்மத்தில் இருந்து மனிதன் தப்பித்துக் கொண்டால், “மதம்” என்னும் ஐந்தாவது அதர்மத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளாமல் போகின்றான். சில வேறு நாட்டில் நான்கு அதர்மங்கள் இல்லாமல் “மதம்” என்னும் அதர்மம்

மட்டும் சம்பூரணமாக இருக்கின்றது. திரேதாயுகத்தில் மதத்தை ஐந்தாவது அதர்மம் இல்லாமல் பாரத நாட்டில் மற்ற நான்கு அதர்மங்கள் சம்பூரணமாக இருந்தது. ஆனால் ஸ்ரீலங்காவில் சிறிதளவுகூட நான்கு அதர்மங்கள் இல்லை. பாரத நாட்டில் தெற்கு பூமி பாகத்தில் அதர்மங்கள் இருந்து அதில் எக்னங்களை அதிகமாக செய்துவந்தார்கள். யக்னங்கள் செய்வது அதர்மம் முறையானதினால் ராவணப்பிரம்மா தன்னுடைய பக்கத்து நாடு பாரத நாட்டில் தெற்கு பூமி பாகத்தில் நடக்கும் யக்னங்களை நடக்க விடாமல் செய்வது என்று தன்னுடைய படைகளுக்கு சொல்லியதினால் ராவணப்பிரம்மா படைகளில் சில பேர் வந்து யக்னங்களை தடுத்து யக்னங்களை செய்கின்ற வரை அவர்களை மிரட்டி அடித்துப் போவார்கள். ராவணப்பிரம்மா தன்னுடைய விமானத்தில் பாரத பூமி பாகத்தில் சுற்றி கொண்டு மேல் இருந்து கவனித்து, எங்கு யக்னங்கள் செய்வது தெரிந்தாலும், அங்கு இறங்கி யக்னங்களை நடக்கவிடாமல் செய்து போவார். அப்படி செய்வதினால் எக்னங்கள் நல்ல காரியம் என்னும் நினைத்து செய்கின்றவர் எல்லோரும் ராவணப்பிரம்மா கெட்டவர் என்னும், தங்களுடைய காரியத்தை நடக்கவிடாமல் செய்ததினால் கெட்டவர் என்று பிரச்சாரம் செய்தார்கள். இப்படி சில வருடங்கள் ராவணன் வாழ்ந்திருந்தவரை பாரத நாட்டில் சிறிது பூமி பாகம் வரை தன்னுடைய விமானத்தில் தன்னுடைய படைகளுடன் சுற்றி யக்னங்கள் செய்கின்ற வரை, தபசு செய்கின்ற வரையும், வேதங்களை படிக்கின்ற வரையும் மிரட்டி தண்டனை கொடுத்ததினால் அவரை பகவான் என்னும் அடையாளிக்காமல் போனதினால் மக்கள் அவரை திட்டிக் கொண்டு இருந்தார்கள்.

**கேள்வி:- ராவணனை பகவான் என்றும் சொல்லியவரில் நீங்கள் தான் முதலானவர். ராவணன் திரேதாயுகத்தில் வந்ததால் அப்போது இருந்து மூன்று யுகத்தில் இதுவரை ராவணனை கெட்டவர் என்னும், சொல்பவரே இருக்கின்றார்கள், கடவுள் அவதாரம் என்னும், பகவான் என்னும் இதுவரை யாரும் சொல்லவில்லை. ஸ்ரீராமனை திரேதாயுகத்தில் கடவுள்**

**என்னும் கேட்டோம். இப்போதும் அவரை ஸ்ரீ ராமன் கடவுள் என்னும் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மட்டும் ராமனை சொல்லாமல் ராவணனை கடவுள் என்று சொல்லுகிறீர். இது சமூகத்திற்கு எதிர்ப்பாக இருக்காதா? கோதண்டராமன் கடவுள் அல்ல என்னும், ராவணன் சொல்லியது போல் நீங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினீர். ராவணன் அயோத்தியா ராமனை கடவுள் அல்ல என்னும் எதற்கு சொல்லினார்? எந்த ஆதாரத்தில் சொல்லினார்?**

**பதில்:-** நீங்கள் புரிந்து கொள்வதில் தவறாக நினைத்தீர்கள். ராவணன் சொல்லியது அயோத்தியா ராமன் "கடவுள் அல்ல" என்பது உண்மைதான்! மேலும் ராமனை "கடவுள் அல்ல" என்று எப்போது ராவணன் சொல்லவில்லை. இங்கு எல்லோரும் தவறாக நினைத்தது "ராமன் ஒருவரே அவரே அயோத்தியா ராமன் என்னும்" நினைத்தது முழுமையான தவறானது என்று சொல்லலாம். விவரமாக சொல்லினால் "ஸ்ரீராமா" இந்த பெயர் குருதாயுகத்திலிருந்து உள்ளது. "ஸ்ரீராமா" என்னும் இந்த வார்த்தை ஒரு நபர் உடைய பெயர் அல்ல. கடவுளுக்கு வேறு ஒரு வார்த்தை "ஸ்ரீராமா" என்னும் சொல்வார்கள். "ராமா" என்னும் வார்த்தையில் தெய்வீகம் இருக்கின்றது. தெய்வீகம் இருக்கின்ற அந்த வார்த்தை பலபேர் குருதாயுகத்தில் பெயராக வைத்துக் கொண்டிருந்தார்கள். "ஸ்ரீராமா" இந்தப் பெயர் வைத்துக் கொண்டிருந்தவர் எல்லோரும் சாதாரண மனிதர்கள்தான். குருதாயுகம் பிறகு திரேதாயுகத்தில் தசரத ராஜாவுக்கு 4 மகன் பிறந்தார்கள், அதில் பெரியவனுக்கு ஸ்ரீராமா என்னும் பெயர் வைத்தார். அப்போதே திரேதாயுகத்திலும் ஸ்ரீராமா என்னும் பெயர் கொண்டவர்கள் பல பேர் இருந்ததினால் தசரதன் மகனுக்கு அவரை விட எல்லா விதத்திலேயும் பெரியவனானதினால் சாதாரணமான மனிதர்கள் ராஜகுமாரனாக பிறந்த தசரதனுடைய மகன் பெயர் சேர்ந்து போகக்கூடாது என்பதற்கு "ஸ்ரீராமா" என்னும் பெயரை விட இவர் பலானவர் என்பது போல், முக்கியமான மனிதன் என்பது போல்,

சாதாரண மனிதன் அல்ல என்பதுபோல், அவர் பெயர் முன்பு அடையாளம் உள்ளது போல் வார்த்தையை வைத்தார்கள். ராமனுக்கு சிறிய வயதில் வைத்த பெயர் முன்பு இவர் பலானவர் என்னும் முதலில் "தசரத ராமா" என்றும் சொல்லினார்கள். பிறகு வில்லு வித்தை பழகி கொண்டிருக்கும் போது "கோதண்டராம" என்று சொல்லினார்கள். சீதாவை திருமணம் அடைந்து பிறகு "சீதா ராமா" என்று சொல்லினார்கள். பிறகு பட்டாபிஷேகத்தில் தசரதனுக்கு வாதங்கள் நடந்து பட்டாபிஷேகம் இல்லாமல் போன பிறகு "ராமா" என்னும் வார்த்தை முன்பு "பட்டாபிராம" என்று சொல்லினார்கள். ராமன் பிறந்தது அயோத்தியாவில் ஆனதினால் அவரை "அயோத்தியா ராமா" என்று சொல்லினார்கள். முதலில் வைத்தது ஸ்ரீராமன் பெயர் ஆனால் அப்படி கூப்பிட்டால் எல்லோருக்கும் சமமாக இருப்பார் என்னும், சாதாரணமானவர்களிடம் சமமாக தெரிவது அவர் தந்தைக்கு இஷ்டமில்லாமல் முதலில் "தசரத ராமா" என்னும் பெயர் வைத்து பிறகு நான்கு அப்படிப்பட்ட பெயர் வேறு வேறாக அழைத்தார்கள். முதல் வைத்த "ஸ்ரீராம" என்னும் பெயர் சிறிய வயதிலேயே இல்லாமல் போய் அவர் நிலையை தெரிவித்த 5 பெயர் வந்ததினால் எல்லோரும் ஐந்தில் யாருக்கு தோன்றிய பெயரை கொண்டு அவரை அழைத்திருந்தார்கள். அந்த விதமாக அழைப்பதனால் முதலில் வைத்திருந்த "ஸ்ரீராமா" என்னும் பெயர் யாருக்கும் பழக்கம் இல்லாமல் போனது. அதனால் யாரும் ஸ்ரீராமா என்னும் பெயரில் அழைக்காமல் மற்ற பெயரில் அழைத்துக் கொண்டிருந்தார்கள். யாராவது ஸ்ரீராமா என்னும் பெயரில் அழைத்தால் அப்படி அழைக்க கூடாது என்னும் அவருக்கு சம்மந்தப்பட்டவர் எல்லோரும் சொல்வார்கள். அப்படி சொல்வதினால் அந்தப் பெயரை எல்லோரும் விட்டு விட்டு "அயோத்தியா ராமா" அந்த பெயரை விட்டு மற்ற நான்கு பெயரில் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ராவணன் "ஸ்ரீராமா" என்ற பெயரை கௌரவித்திருந்தார். "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை கடவுளுக்கு சம்மந்தப்பட்ட பெயர் என்னும்

சொல்லிக்கொண்டிருந்தார். "ஸ்ரீராமா" என்னும் மூன்று எழுத்துக்களை பக்தியில் அழைத்தால் அழைக்கப்பட்ட அவர்களுக்கு சில கர்மங்கள் எரிந்துவிடும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். **ஸ்ரீ** என்றால் சுபம் கொண்ட மோக்ஷம் என்னும், **மா** என்றால் நான் என்னும், **ர** என்றால் நாசனம் ஆகுவது அல்லது இல்லாமல் போவது என்று அர்த்தம் கொண்டது. **"நான் இல்லாமல் போய் மோக்ஷம் அடைவது"** என்று அர்த்தம். "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை அழைப்பதில் **ஜீவனாக இருந்தவன் (மா) இல்லாமல் போய் (ரா) மோக்ஷம் அடைவது (ஸ்ரீ).** இதனை பொறுத்து ஜீவன் இல்லாமல் போய் கடவுளாக மாறி போகிறது என்று அர்த்தம். கடவுளில் ஐக்கியமாகிப் போகும் வார்த்தை "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை. அதனால் ஸ்ரீ ராமா என்னும் பக்தியில் சொல்லினால் அவர்களுக்கு சில கர்மங்கள் எரிந்து போகும் என்னும் "ராவணப்பிரம்மாவே" பலபேருக்கு சொல்லினார். தசரத ராமனை ராவணப்பிரம்மா கடவுளாக எப்போதும் ஒப்புக்கொள்ளவில்லை. "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை பெரியது, தெய்வ சூத்திரத்தில் இருக்கின்றதினால் அந்தப் பெயரை வைத்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் சாதாரண மனிதராகவே இருப்பார் என்னும், யாரும் அந்தப் பெயருக்குத் தகுந்தபடி கடவுள் அல்ல என்பது ராவணப்பிரம்மாவின் வாதனை. ராவணப்பிரம்மாவுக்கு தெரிந்த விதானம் பிரகாரம் "அயோத்தியா ராமா" என்பவர், "தசரத ராமா" என்பவர் "ராமா" என்னும் பெயர் கொண்ட நபர் தான் கடவுள் அல்ல என்று ராவணப்பிரம்மா சொல்லினார். "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை தெய்வ சக்தியில் கூடிய சத்தம். அந்த சத்தத்தை மனிதர்களுக்கு பெயராக வைத்தாலும், அவர் மனிதர்களாகவே இருப்பார்கள். யாராவது "ஸ்ரீராமா" என்னும் வார்த்தைக்கு அர்த்தம் தெரிந்து, உண்மை எண்ணங்களில் "ஸ்ரீராமா" என்னும் அழைத்தால், அழைத்த அவருக்கு சிறிது கர்மம் போவது உண்மைதான் என்னும் நாம் கூட ஒப்புக்கொள்ள வேண்டியது தான். உண்மையாக அந்த வார்த்தை **"மராஸ்ரீ"** என்று இருந்தது. அந்த வார்த்தையை

சொல்வதில் "ஸ்ரீராமா" என்று வார்த்தையாக ஏற்பட்டது. மராஸ்ரீ என்றாலும், ஸ்ரீராமா என்றாலும் இரண்டும் ஒரே அர்த்தத்தை குறிக்கின்றது. ராவணப்பிரம்மா "ஸ்ரீராமா" என்னும் வார்த்தையை கடவுளாக ஒப்புக்கொண்டவர் என்னும், பெயர் வைத்து கொண்டிருந்தால் "மனிதன் கடவுள்" என்றும் வார்த்தையை முழுமையாக எதிர்ப்பு தெரிவிப்பார். திரேதாயுகம் உண்மையான பெயர் திரைதாயுகம். ஆனால் அது திரேதாயுகமாக மாறிப்போனது. அப்படியே "ஸ்ரீராமா" என்னும் வார்த்தை தெய்வத்தை தெரிவிப்பது. ஆனால் 1) தசரத ராமா, 2) அயோத்யா ராமா, 3) கோதண்டராமா, 4) பட்டாபிராமா, 5) சீதா ராமா, 6) கல்யாண ராமா என்னும் பெயர்கள் தெய்வத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல வென்று தெரிவித்து, திரைதாயுகத்தில் (திரேதாயுகத்தில்) "கடவுள் மனிதனாகப் பிறந்தது" உண்மைதான், தசரதன் மகன் கடவுள் அல்லவென்று ராவணப்பிரம்மா சொல்லியதினால், அந்த விஷயத்தை பக்தி கபீர்ரும் கொண்ட "ஸ்ரீராமன் வேறாக இருக்கின்றார்". நான் தசரதராமனை கூப்பிடவில்லை, நினைக்கவில்லை. நான் மட்டும் ஆத்மா ராமன் ஸ்ரீராமனை நினைத்துக் கொண்டிருக்கிறேன், மற்றும் அயோத்தியா ராமனை நான் நினைக்கவில்லை" என்றும் பக்தி கொண்ட கபீர்ரும் சொல்லினார். இதனை பொறுத்து ராமன் யார், ராவணன் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**கேள்வி:- ராவணன் "ஸ்ரீலங்கா" என்ற நாட்டில் உள்ளார். ஜனகன் பாரத நாட்டில் இருந்தார். பக்கத்து நாட்டில் உள்ள ராவணன் பாரத நாட்டிலுள்ள ஜனகனுக்கு குரு எப்படி ஆனார்? ஜனகன் கடலைத் தாண்டி போகவில்லை அல்லவா! இதற்கு உங்கள் பதில் என்ன?**

**பதில்:-** ராவணன் பிறந்தது லங்காவில். ராவணன் பிறப்பதற்கு பூர்வம் லங்காவும் பாரத நாட்டிற்கு சம்மந்தப்பட்ட நாடாக சொல்லப்பட்டிருந்தது. லங்காவுக்கும் பாரத நாட்டிற்கும் ஆயிரம் மீட்டர் தூரம் விட அதிகமில்லை. **1000** மீட்டர் என்றால் ஒரு கிலோமீட்டர். **1000** மீட்டர் கடலிலிருந்து

சிலர்கள் நீந்துக்கொண்டு கடலைத் தாண்டுவார்கள். சிலர்கள் நீந்துவதற்கு தூரம் ஆனதினால் கடலில் இறங்க மாட்டார்கள். ராவணப்பிரம்மா பிறந்த நேரத்தில் **"கடவுள் பகவானாக பிறந்தார் என்னும்"** மேகங்கள், மஹா பூதங்கள் (ஜீவன்கள்) சந்தோஷப்பட்டு அதிக மழை பெய்து, பூமி சந்தோசத்தை தெரிவித்து அசைந்தது, கடலில் சுனாமி, பூமி மேல் வெள்ளங்கள் ஏற்பட்டது. அந்த சுனாமியினால் பாரத பூமி பாகத்தில் கிட்டதட்ட **20** கிலோமீட்டர்கள் மூழ்கிப்போனது. அப்போது இருந்து பாரத நாட்டில் உள்ளவர்கள் கடலை தாண்ட முடியாமல் லங்காவிற்கு போவதற்கு முடியாமல் இருந்தார்கள். அப்போதிருந்து லிங்காவிற்கு பாரத நாட்டிற்கு சம்மந்தம் பிரிந்து போனது. இது எல்லாம் ராவணன் பிறந்தபோது நடந்தது. அதுவரை பாரத நாடு ஆட்சி செய்து கொண்டிருந்த லங்கா முக்கியமான தேசமாக (நாடாக) ஏற்பட்டது. "லங்கா" என்றால் "சுற்றி இருந்த தண்ணீர் சில பகுதிகளில்" என்று அர்த்தம். ராவணன் பிறந்ததினால் லங்கா முக்கியமான ராஜ்ஜியமாக ஏற்பட்டது. பாரத நாடு ஆட்சி செய்து கொண்டிருந்த சம்மந்தங்கள் பிரிந்துபோய் லங்காவிற்கு முக்கியமான ராஜா, முக்கியமான ஆட்சி நிர்வாகம் ஏற்பட்டது. ராவணனுக்கு 25 வருடங்கள் வந்தவுடன் லங்காவை பார்த்து கொள்ளுவதற்கு ஆன பொறுப்பு ராவணனுக்கு வந்தது. சிறிய வயதிலேயே லங்கா ராஜ்ஜியத்திற்கு ராஜாவான ராவணன் தன்னுடைய நாட்டில் உள்ள ஒவ்வொரு நபர் தெய்வ ஞானம் தெரியும்படி, ஆராதனை செய்தால் ஒரே ஒரு ஈஸ்வர லிங்கத்திற்கு மட்டும் ஆராதனை செய்யவேண்டும் என்றும் தயார் செய்தார். லங்கா நாட்டில் ராவணன் ராஜாவான பிறகு மக்கள் எல்லோரும் ஞானிகளாகி, எல்லோரும் ஈஸ்வர லிங்கத்தை பூஜை செய்வதினால் லங்கா ஒரு ஆத்மாஞானம் தெரிந்த மையமாக ஏற்பட்டது. அதுவரை "லங்கா" என்னும் (தெலுங்கு எழுத்தில் இரண்டு) பெயர் மோக்ஷத்திற்கு அடையாளமான "ஸ்ரீ" வந்து சேர்ந்தது. அதனால் அப்போதிருந்து லங்கா ஸ்ரீலங்காவாக மாறிப்போனது. லங்காவை ஸ்ரீலங்காவாக எல்லோரும்

அழைப்பதற்கு பழக்கப்படுத்திக் கொண்டார்கள். அப்போதிருந்து இன்றுவரை லங்கா நாடு ஸ்ரீலங்கா என்று அழைக்கப்படுகின்றது. அந்த காலத்தில் திரேதாயுகம் இறுதி வரை இரவு நேரம் ஸ்ரீலங்கா பக்கம் என்றால் பாரத தேசத்திற்கு தெற்கு பக்கம் வெளிச்சம் தெரிந்து கொண்டிருந்தது. தூரத்தில் இருந்து ஸ்ரீலங்காவில் உள்ள வெளிச்சத்தைப் பார்த்து பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள் லங்காவில் ஏதோ பெரிய சக்தி இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தப் பெரிய சக்தி ராவணன்தான் என்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள். தெற்கு பாரத நாட்டில் எல்லோரையும் விட மேலாக ஞானிகள் இருந்தார்கள். பெரிய ஞானிகளான சிலர்கள் ராவணன் சாமான்யமான மனிதன் அல்ல என்னும் அவரில் தெய்வ ஞானம், தெய்வம் இருக்கின்றது என்னும் தெரிந்து "ராவணா" என்னும் பெயர் இறுதியில் "பிரம்மா" என்னும் தலைப்பு வைத்து முழுமையாக, **"ராவணப்பிரம்மா"** என்றும் சொல்லினார்கள். இந்த விதமாக லங்கா, ஸ்ரீலங்கா ராவணன் "ராவணப்பிரம்மாவாக" மாறிப் போனார்கள். ராவண பிரம்மாவை விட கிட்டதட்ட 25 வருடங்கள் சிறியவனான ஜனகன் ஸ்ரீலங்கா பக்கம் இரவு நேரத்தில் தெரிகின்ற வெளிச்சத்தைப் பார்த்து, ராவணப்பிரம்மா பெரிய ஆத்மஞானம் தெரிந்த நபர் என்னும், எந்தவிதமாவது ராவணப்பிரம்மாவுக்கு சிஷ்யனாக ஆக வேண்டும் என்று ஜனகன் நினைத்தார். **அப்போது காலத்தில் ராவணப்பிரம்மாவுக்கு ஹவுஸ்ஷத குணங்கள் மற்றும் மந்திர சக்தி தரங்கள் இணைந்து இருக்கின்ற விமானம் இருந்தது.** விமானம் என்றால் ஆகாசத்தில் பயணம் செய்வது என்று அர்த்தம். அந்த விமானம் பூமி மீது இறங்காமல் ஆகாயத்திலேயே நின்று கொண்டிருக்கும். பயணம் செய்கின்ற நேரத்தில் மட்டும் பூமி மீது இறங்கினாலும் பூமிக்கு அடி உயரத்தில் நின்று இருக்கும். அந்த விமானத்தை அதிகமாக பூக்களால் அலங்கரித்து இருக்கும். ராவணப்பிரம்மா மீது குரு பக்தியுள்ள ஸ்ரீலங்கா மக்கள் அவர் பயணம் செய்கின்ற

விமானத்தை பூக்களால் அலங்கரித்து இருப்பார்கள். அதனால் அதன் பெயர் “புஷ்பக விமானம்” (மலர் விமானம்) என்று சொல்லப்பட்டது. ராவணப்பிரம்மா தன்னுடைய நாட்டிற்கு பக்கத்திலுள்ள பாரத நாடு தெற்கு பகுதிகள் எல்லாம் தன்னுடைய ஞானத்தை தெரிவித்தார். அப்போது காலத்தில் ராவணப்பிரம்மா ஞானத்தை தெரிந்துக் கொண்டு எத்தனையோ பேர் பெரிய ஞானியாக மாறினார்கள். ஜனகன் தெற்கு பாரத நாட்டில் ஒரு பகுதியில் ராஜாவாக இருந்தார். அவர் ராவணப்பிரம்மாவை குருவாக வேண்டியவரில் முதலானவர். அதனால் ராவணப்பிரம்மா தன்னுடைய விமானத்தில் எந்தப் பகுதிக்கு வந்து ஞானத்தை சொல்லினால் அந்தப் பகுதிக்குப் போய் ஞானத்தை தெரிந்துக் கொண்டிருப்பார் ஜனகன். அந்த விதமாக ராவணப்பிரம்மா ஞானம் தெரிந்து கொண்டதால் ஜனகன் பெரிய கர்ம யோகியாக மாறிப்போனார். கர்மயோகத்தை அனுசரித்து அந்த ஜென்மத்தில் மோட்சம் அடைந்தது போல் பகவத்கீதையில் கர்மயோகம் 20 தவது சுலோகத்தில் சாக்ஷியமாக உள்ளது. பாரத நாடு பக்கம் இருக்கின்ற நாடு ஸ்ரீலங்கா தெய்வ ஞானத்தில் முதல் இடத்தை பிடித்து இருந்தது, வடக்கு நாட்டைச் சேர்ந்தவர் ஆரியர்கள் ராவணப்பிரம்மா மீது, ஸ்ரீலங்காவின் மீது பொறாமைப்பட்டு ராவணப்பிரம்மாவின் நல்ல பெயரை கெடுக்க வேண்டும் என்னும் திட்டம் திட்டிக் கொண்டு அதே வேலையாக ராவணனை நல்லவர் அல்ல என்றும், கெட்டவர் என்றும் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். உண்மையை தெரியாத மக்கள் யார் என்ன சொன்னாலும் அந்த வார்த்தை ஆலோசனை செய்யாமல் கேட்பதினால் ஆரியர்கள் பிரச்சாரம் செய்தது போல் ராவணன் ராக்ஷஸன் என்னும், காமந்தன் என்னும், கெட்டவன் என்று நம்பினார்கள். ஆரியர்கள் அதுவரை நிறுத்தாமல் ராவணப்பிரம்மாவுக்கு சிறிது கூட சம்மந்தம் இல்லாதவை வடக்கு நாட்டைச் சேர்ந்தவன் தசரதராமன் ராவணனுக்கு எதிராக பிரச்சாரம் செய்தார்கள். அதில் மக்களில் ராமன் நல்லவன், கடவுள் என்னும், ராவணன் கெட்டவர், ராக்ஷஸன் என்று பிரச்சாரம் ஆகியது. ராவணப்பிரம்மா “கடவுள் அவதாரம் பகவானாக” இருந்து,

தெய்வம் ஞானத்திற்கு அதிகம் முன்னுரிமை கொடுத்து பிரச்சாரம் செய்து, யாருக்கும் சிறிதளவுகூட கெட்டது செய்யாமல் இறுதியில் இன்று மக்களில் ராவணன் நல்லவர் அல்ல என்னும், மக்களில் கெட்டவராக இருந்துவிட்டார். பெயர் இறுதியில் பிரம்மா என்னும் தலைப்பு இருந்து பெயர் முதலில் “பகவான்” என்னும் சத்தம் இருந்தாலும், அவரில் உள்ள தெய்வத்தன்மை அடையாளிகாமல் அஞ்ஞானிகள் அவரை கெட்டவராக நினைத்து, அந்த நாள் அவர் சொல்லிய ஞானத்தை அனுசரித்து இன்று கூட பாரத நாட்டில் அவர் பக்தர்கள் அங்கங்கு இருக்கின்றார்கள். ராவணப்பிரம்மா தெய்வ ஞானத்தை மட்டும் போதித்ததினால் லங்காவை சுற்றி உள்ள கடலுக்கு “ஞானம் கடல்” என்னும் அர்த்தம் வரும்படி “இந்து மஹா கடல்” என்று பெயரிடப்பட்டது. “இந்து” என்னும் வார்த்தை இந்த காலத்தில் என்றால் கிட்டத்தட்ட **150** வருடங்கள் முன்பு சத்தம் மாற்றம் அடைந்து ஹிந்து மஹா கடலாக பெயர் மாறிப்போனது. “இந்து” என்னும் வார்த்தைக்கு “ஞானம்” என்னும் அர்த்தம் இருக்கின்றது மேலும், “ஹிந்து” என்னும் வார்த்தைக்கு அர்த்தமில்லை என்று தெரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் பூர்வம் இருந்த பெயரை “இந்து” என்னும் சொல்லினால், வரலாறு தெரியாதவர்கள் இது ஏதோ வேறு மதமாக எண்ணிக்கொண்டு, எங்களைக் கூட வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று பிரச்சாரம் செய்கின்றார்கள். அவ்வளவு பெரிய ராவணப்பிரம்மாவை கெட்டவர் என்னும் சொல்லியவர்கள் எங்களை கூட வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று பிரச்சாரம் செய்வதில் பெரிய விஷயமில்லை.

**கேள்வி:- ஸ்ரீலங்கா பகுதியில் இரவு நேரத்தில் வெளிச்சம் பாரத நாடு வரை தெரிகின்றது என்று சொல்லினிர் அல்லவா! அப்படி எதற்கு தெரிந்தது? இந்த விஷயங்கள் ராமாயணத்தில் கூட எழுதவில்லை அல்லவா! நீங்கள் எப்படி சொல்கிறீர்கள்?**

**பதில்:-** உலகம் எல்லாம் அணுவணுவில் பரவி உள்ளவர் கடவுள் ஒருவர் தான். கடவுள் சக்தி கொண்டவர், அவர்

அனைத்திலும் பரவி இருந்தாலும் தெரிகின்ற உருவம் இல்லாதவர். அதனால் அவரை யாரும் பார்க்க முடியவில்லை. கடவுள் இருக்கின்றார் என்பதற்கு ஏதாவது எல்லோருக்கும் தெரியும்படி சாக்ஷயம் இருக்க வேண்டும், மேலும் அஞ்ஞானிகளுக்கு தெரியும்படி, ராவணப்பிரம்மா அவதாரத்தில் கடவுள் பகவானாக இருந்து, முதன் முதலில் வந்த அவதாரமானதினால் அந்த விஷயத்தை எல்லோருக்கும் அடையாளம் இருக்கும்படி லங்கா பகுதி எல்லாம் ஆகாசத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்துகொண்டிருந்தது. ராவணப்பிரம்மா நூறு வருடம் வயதில் இறந்துபோன பிறகு, அதுவரை ஸ்ரீலங்கா பகுதியில் ஆகாசத்தில் தெரிகின்ற வெளிச்சம் இந்து (ஹிந்து) மஹாகடல் மீதுக்கு நகர்ந்து சென்றது. **“ராவணன் ஜென்மம் முதன் முதலில் பகவான் ஜென்மம்”** ஆனதினால் அந்த விஷயம் எப்போதும் நினைவு இருக்கும்படி ராவணப்பிரம்மா சக்தி அவர் தேகத்தில் இருக்கும் வரை வெளிச்சமாக தெரிந்துக் கொண்டுயிருந்தது. அவர் தேகம் விட்டு போன பிறகு அதுவரை வெளிச்சமாக தெரிந்துக் கொண்டிருந்த சக்தி காரியவுருவத்திற்கு மாறிப்போய் ஹிந்து மஹா கடல் மீது லங்காவிற்கு கீழ் பாகத்தில் இருந்து. அந்தக் காலத்தில் கடல் மீது பயணம் செய்கின்றவர் யாரும் இல்லை. திரேதாயுகம், துவாபரயுகம், கடந்து போய் பிறகு வந்த கலியுகத்தில் கடல் மீது நடத்தும் கப்பல் வந்தது. பாரத நாட்டிற்கு ஸ்ரீலங்காவுக்கு நடுவில் பெரிய மண் பாறை இருந்ததினால் கிழக்குப் பகுதிக்கு வரும் கப்பல்கள் எல்லாம் ஸ்ரீலங்காவை சுற்றி வர வேண்டியது தான். திரேதாயுகம், துவாபரயுகம் கடந்து போன பிறகு கலியுகம் முதலிலேயே காரிய உருவத்திலுள்ள ராவணப்பிரம்மா ஆத்மா சக்தி மேற்பரப்பு காரியசக்தியாக மாறிபோய் அமெரிக்கா பக்கத்தில் 500 கிலோ மீட்டர் தூரத்தில் கடலில் முக்கோண வடிவத்தில் நின்று போனது. அமெரிக்காவில் ப்ளோரிடா மாநிலத்தில் இருந்து 500 கிலோ மீட்டர் தூரத்தில் கிழக்கு பகுதியில் பெர்முடா தீவு பக்கத்தில் நின்ற பிரம்மசக்தி காரிய சக்தியாக மாறி போனதினால் தன் அடையாளத்திற்காக மக்களுக்கு

அர்த்தமாகாத வேலை செய்கின்றது. கடலில் ராவணப்பிரம்மா ஜென்மத்திற்கு அடையாளமாக நின்ற ராவணப்பிரம்மா ஆத்மா சக்தி மூன்று ஆத்மா சித்தாந்தம் பிரகாரம் மூன்று கோணத்தில் நடுவில் நின்று போனது. கடல் மேற்பரப்பில் முக்கோண வடிவத்தில் உள்ள சக்தி அந்தப் பகுதிக்குப் போன பெரிய பெரிய கப்பல்களை, ஆகாசத்தில் அந்தப் பகுதிகளுக்கு போகின்ற விமானங்களை இப்போதும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் தெரியாமல் போகும்படி செய்தது. அது ராவணப்பிரம்மா அடையாளமாக இருக்கின்ற சக்தி என்னும் இதுவரை யாருக்கும் தெரியாது. பெர்முடா தீவு பகுதியில் முக்கோணத்தில் இருக்கின்ற தெரியாத சக்தியினால் யாரும் தெரிந்து கொள்ளாத நிலை நடந்துக் கொண்டுயிருக்கின்றது. ராமாயணத்தில் வெறும் ராமன் பக்கம் இருக்கின்ற விஷயத்தை நல்லதாக தெரிவித்து எழுதினார்கள். அதில் ராவணப்பிரம்மா பற்றி ஒரு விஷயத்தைக் கூட எழுதாமல் ராவணப்பிரம்மாவை கெட்டவராக வர்ணித்து வரைந்து காட்டினார்கள். மேலும் அந்த நாள் லங்காவில் நடந்த சமாச்சாரத்தை, கடல் மீது வெளிச்சம் பற்றி எதுவும் எழுதவில்லை. ராமாயணத்தில் வெறும் ராமன் பக்கத்தில் உள்ள சமாச்சாரத்தை மட்டும்தான் எழுதினார்கள். அதனால் இந்த நாள் இருக்கின்ற பெர்முடா ட்ரையான்கிளுக்கு மூலாதாரம் கொண்ட அந்த நாள் சக்தியைப் பற்றி யாருக்கும் தெரியாமல் போனது. அந்த நாள் லங்கா பகுதியின் மீது ஆகாசத்தில் இரவு நேரத்தில் தெரிகின்ற வெளிச்சத்தைப் பற்றி நான் சொன்னாலும் இன்று மக்கள் நம்பாத நிலையில் இருக்கின்றார்கள். ராமாயணத்தில் இல்லாத விஷயத்தை நீங்கள் எப்படி சொல்கின்றீர்கள் என்றும் என்னை கேள்வி கேட்கின்றார்கள். ராமாயணத்தில் ராவணன் விஷயம் இருக்காது என்னும், அது வெறும் ராமன் விஷயம் எழுதியது என்று அவருக்கு தெரியாது. நான் எழுதிய கிரந்தங்கள் எல்லாம் யாருக்கும் தெரியாத விஷயங்கள் போதிக்கின்றது. எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள் நான் சொல்ல வேண்டிய அவசியம் தேவை இல்லை. யாருக்கு தெரியாத பல ரகசியங்கள் நான் சொல்லினேன். அந்த விஷயம்

யாருக்கும் தெரியாது என்றும் சொல்வது உண்மை தான் அந்த விஷயங்கள் உண்மையாக எனக்கு கூட தெரியாது. இந்த விதமாக எல்லா விஷயங்கள் எழுதிய நான் சொல்லுவது சில பேருக்கு விசித்திரமாகவே இருக்கும். யாருக்கு எப்படி இருந்தாலும் சில ரகசியமான விஷயங்கள், வரலாறில் நடந்த சில விஷயங்கள் எனக்கு தெரியாது என்னும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒன்னும் தெரியாததை எப்படி எழுதினீர்கள்? என்னும், சிலர் கேட்ட கேள்விக்கு பதில் நான் இப்படி சொல்கின்றேன். மனிதன் தேகத்தில் ஜீவன், கடவுள் என்று இருவர் இருக்கின்றார்கள். ஜீவனாக நான் தேகத்தில் இருக்கும் போது என் தேகத்தில் இருக்கின்ற ஆத்மா கடவுளாக சொல்லப்படுகின்றது. ஜீவாத்மா, ஆத்மா இரண்டும் ஒவ்வொரு தேகத்தில் இருக்கும் போது பரமாத்மா என்னும் மூன்றாவது ஆத்மா தேகத்தில் உள்ளே, வெளியே எல்லாத்திலேயும் அணுவணுவில் பரவி இருக்கின்றது. வெளியிலும் பரவி இருக்கின்ற பரமாத்மாவை கடவுள் என்னும் சொல்லலாம். கடவுள் என்றால் அனைத்திலும் பரவி இருக்கின்றவர் தேகத்தில் இருக்கும் ஆத்மாவையும் கடவுளே என்று சொல்கின்றார்கள். பிரம்மவித்தையில் பரமாத்மாவை மற்றும் ஆத்மாவை இருவரையும் ஒரே பெயர் கொண்ட "கடவுள்" என்றும் சொல்கின்றார்கள். தேகத்துக்குள்ளே கடவுளான ஆத்மா குருதாயுகத்தில் இருந்து இப்போது வரை ஜீவனுடன் இருக்கின்றார். ஜீவனுக்கு இந்த ஜென்ம ஞாபகம் இந்த ஜென்மம் வரை இருக்கும். ஆத்மாவுக்கு எல்லா ஜென்மங்கள் ஞாபகம் இருக்கும். மேலும் தேகத்தில் தளபதியாக, அதிகாரியாக இருக்கின்ற ஆத்மா அனைத்து வேலைகளை செய்து, அனைத்து வார்த்தைகள் பேசுகின்றார். தேகத்தில் ஜீவன் உண்மையாக எந்த வேலையும் செய்யவில்லை. "தேகத்தில் நடக்கும் எல்லா வேலைகளை நான்தான் செய்கின்றேன் என்னும்" ஜீவன் அகம்பாவத்தினால் நினைத்துக் கொண்டு இருக்கிறான். அப்படியே தேகத்துக்குள் இருக்கின்ற ஒவ்வொரு வார்த்தை தேகத்துக்குள் இருக்கும் ஆத்மாவே பேசிக்கொண்டிருக்கும்போது, ஜீவன் சும்மா இருக்கும்போது அஞ்ஞானத்தினால், அகங்காரத்தினால் நான்

தான் பேசுகின்றேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். இந்த விஷயம் மூன்று தெய்வ கிரந்தத்தில் விவரமாக சொல்லப்பட்டது. உதாரணத்திற்கு தித்திவிய தெய்வ கிரந்தத்தில் மத்தேயு 10-20 வாக்கியத்தில் **“நீ பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தை உன் தந்தையான ஆத்மாவே பேசுகின்றார், நீ எந்த வார்த்தையும் பேசவில்லை.”** என்று சொல்லியுள்ளார். அப்படியே பிரதம தெய்வகிரந்தமான பகவத்கீதையிலும் பல இடத்தில் இந்த விஷயத்தை சொல்லி உள்ளார். இந்த வாக்கியம் பிரகாரம் எத்தனையோ ரகசியங்கள் நான் சொல்லவில்லை. என் தேகத்து உள்ளிருக்கும் ஆத்மாவே சொல்கின்றது. இந்த விஷயத்தை நான் இதற்கு முன்பு பல தடவை சொல்லியுள்ளேன். இதன்பிரகாரம் இந்த கிரந்தத்தில் சொல்லிய விஷயங்கள் அனைத்தையும் ஜீவனாகிய நான் சொல்லியது அல்ல. இரண்டாவது கடவுளான ஆத்மாவே சொல்லியது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:- ராவணப்பிரம்மா சில பேரிடம் “பகவான் ராவணன் பிரம்மாவாக” அழைக்கப்பட்ட அவர் ராமனின் அம்புக்கு இறந்து போனார். ராமன் அம்பு நாபியில் (தொப்புளில்) குத்தியதால் ராவணப்பிரம்மா உயிர் இழந்தார் என்று ராமாயணத்தில் எழுதினார்கள். நீங்கள் சொல்லும் ராவண ஆயணம் பிரகாரம் அந்த வார்த்தை சத்தியம் தானா என்னும் நாங்கள் கேட்கின்றோம்? பகவான் ஜென்மம் அவ்வளவு சுலபமாக மரணிப்பது சிறிது விசித்திரமாக இருக்கின்றது. அந்த நாள் நடந்த உண்மையை தெரியப்படுத்துங்கள் என்று கேட்கின்றோம்?**

**பதில்:-** ராவணன் பகவான் என்னும் பூர்வம் சிலர் அடையாளித்தீர்க்கலாம் மேலும், இப்போது ராவணனை கெட்டவராக அடையாளித்த சமூகத்தில் ராவணனை “கடவுள் அவதாரமான பகவான்” என்னும் அப்படி சொல்லியவரில் நாங்கள் முதலானவர். கடவுள் தர்மசம்ஸ்தாபனத்திற்கு பூமி மீது மனிதனாக பிறந்தால் தன் சாதாரண மனிதனாகவே

நடந்துக் கொண்டு, தன்னை சாமான்யமான மனிதனாகவே எல்லோரும் அடையாளிக்கும் படி செய்து, தான் பகவான் என்றும் யாருக்கும் தெரியப்படுத்த மாட்டார். அவர் எப்படி வாழ்ந்தாலும் அவர் வந்த காரியம் நிறைவேற்றி போவார். பூமி மீது ஒருவருக்கு, பல பேருக்கு தெய்வ தர்மங்கள் தெரிவித்து போவார். கிருஷ்ணர் அவதாரத்தில் அர்ஜுனனுக்கு ஒருவனுக்கு மட்டும் ஞானம் சொல்லி, பிறகு கலியுகத்தில் வந்த ஜென்மத்தில் பலபேருக்கு ஞானத்தை தெரிவித்தார். கடவுள் “பகவான்” என்னும் மனிதனாக மூன்று யுகத்தில் மூன்று தடவை வந்தார் என்னும் தாமதமாக தெரிந்துகொண்டோம். ராவணப்பிரம்மா ஜென்மம் முதல் பகவான் ஜென்மம் என்று தெரிந்து கொண்டோம். முதல் ஜென்மத்தில் எப்படி மரணித்தாரோ அப்படியே மூன்று ஜென்மத்திலேயும் இறந்து போக வேண்டும் என்றும் மக்களுக்கு தெரிய வேண்டும் என்று அவர் நினைத்துக் கொண்ட முடிவு. அப்படியே ரத்தம் சிந்தியே மூன்று ஜென்மத்திலும் இறந்து போகும்படி நடந்தது. ராவணப்பிரம்மாவுக்கு முதலில் இருந்து தெரிந்த படி போர் நடந்தது. தன் அயோத்தியா ராமனினால் இறந்து போவேன் என்னும் ராவணன் தன் மனைவி மண்டோதரி தேவிக்கு சொல்லினார். ராமன் லங்காவுக்கு வந்து போர் செய்வதற்கு தேவைப்படும் வானிலையை அந்த வேலையை அவரே உருவாக்கினார். அவர் முதலிலேயே நினைத்தபடி போர் நடந்தது. அந்தப் போரில் ராமன் அம்பு ராவணப்பிரம்மா தொப்புளில் பட்டு ராவணப்பிரம்மா இறந்துபோவது நடந்த வேலை. ஆனால் வயிற்றில் தொப்புள் இடத்தில் எந்த ஆயுதத்தாலும் குத்தினாலும் அங்கு இறந்து போனதற்கு காரணமான உறுப்புகள் இல்லாததினால் யாரும் இறந்து போக மாட்டார்கள். ஆனால் ராமாயணத்தில் எழுதிய அதன் பிரகாரம் பார்த்தால் ராவணப்பிரம்மா தொப்புலிள் அமிர்தம் நிறைந்த கலசம் இருக்கின்றது என்னும், அது இருக்கும் வரை ராவணன் மரணிக்க மாட்டார் என்னும், ராவணன் தம்பி விபீஷினினால் ராமன் தெரிந்து கொண்டு, ராமன் தன்னுடைய

அம்பு தொப்புள் இடத்தில் குத்தியது போல் செய்து, ராவணன் தன் வயிற்றில் தொப்புள் இடத்தில் குத்திக்கொண்ட அம்பினால் மரணித்தார் என்று சொல்லினார்கள். ஆனால் அது சிறிது உண்மை, சிறிது பொய்யாக இருக்கின்றது. ராமன் அம்பு ராவணன் தொப்புளில் பட்டது உண்மைதான், ராவணன் தொப்புளில் அமிர்த கலசம் இருக்கின்றது என்ற வார்த்தை முழுமையாக பொய்யானது. உண்மையாக வயிற்று இடத்தில் எங்கு எந்த ஆயுதம் பட்டாலும் இறந்துபோகும் அபாயம் இருக்காது. உண்மையாக மனிதன் இறந்து போகும் அபாயம் ராமன் அம்பினால் ஏற்படவில்லை. ஆனால் ராவணப்பிரம்மா இறந்தார். "குற்றமற்றவர்கள் பிடிவாத மாணவர்கள்" என்னும் பழமொழி பிரகாரம் ஏதோ ஒரு காரணத்தினால் மனிதன் இறந்து போவான். அதே விதமாக ராவணப்பிரம்மா தன் முதலிலேயே நிர்ணயித்த படி சின்ன காயத்திற்கு இறந்துபோகும் படி நடந்தது. மேலும் தொப்புளில் அமிர்தத்தை அடித்தார் என்பது உண்மை அல்ல. கிருஷ்ணன் ஜென்மத்திலும் அபாயம் இல்லாத இடத்தில் கால் விரலுக்கு அம்பு பட்டதினால் அந்த காரணத்தினால் அவர் மரணித்தார். மூன்று ஜென்மத்திலும் ரத்தம் சிந்தி மரணிக்க வேண்டியது என்பது முடிவு. அந்த முடிவு பிரகாரம் ஒரு ஜென்மத்தில் வயிற்றில் அம்பு படுவது காரணமாக, இரண்டாவது ஜென்மத்தில் கால் விரலுக்கு அம்புபட்டு சின்ன காயமானது. சின்ன காயத்தில் சிறிது ரத்தம் சிந்தி அந்தக் காரணத்தினால் கிருஷ்ணன் இறந்துபோவது நடந்தது. அப்படியே மூன்றாவது ஜென்மத்தில் கையில் ஆணி அடித்து சிறிது ரத்தம் சிந்தியதால் இயேசு இறந்து போவது நடந்தது. ஒன்று வயிற்றுக்கு, இரண்டு காலுக்கு, மூன்று கைக்கு பட்டு ரத்த காயத்தில் இறந்து போனார். உண்மையாக அந்த மூன்று விதானங்கள் ரத்தம் சிந்தியது சொல்லிய வார்த்தை உண்மைதான் அது மரணிக்க வேண்டிய அபாயம் அடையும் காயம் அல்ல. பகவானாக பிறந்தவர் மூன்று விதமாக இறந்து போனார் மூன்றிலும் ரத்தம் சிந்தியது தவிர ஒன்றுமில்லை. அப்படி மூன்று ஜென்மத்தில் ஒரே விதமாக இறந்து போவதினால் மூன்று ஜென்மத்திற்கு ஒன்றுக்கு ஒன்று

இணையும் சம்மந்தம் இருக்கின்றது என்றும், அந்த சம்மந்தத்தை பொறுத்து மூன்று ஜென்மங்கள் பகவான் உடையது என்று அடையாளிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இறந்து போன கொள்கை ஒன்றுதான், போதித்த ஞானம் ஒன்று தான் ஆனதினால் மூன்று ஜென்மங்கள் பகவான் உடையது என்றும் சொல்லுவதற்கு முழுமையான ஆதாரம் கிடைத்தது. ராவணப்பிரம்மா தன்னுடைய மரணத்தை தன் முதலிலேயே நிர்ணயித்துக் கொண்டு வெளியில் முதலிலேயே சொல்லினார். அவர் சொல்லிய வார்த்தை பிரகாரம் ராவணன் இறந்து போனார் என்றும் சொல்லலாம், மேலும் ராமன் அம்பினால் இறந்துபோனார் என்னும் சொல்லுவதற்கு வாய்ப்பில்லை. ராமன் அம்பு காரணத்தினால் முதலிலேயே ராவணன் சொல்லிய வார்த்தை நிறைவேறியது. ராவணப்பிரம்மா மரணம் சாதாரண மனிதன் போல் நடந்திருந்தாலும், அவர் மரணத்திற்குப் பிறகு பெரிய வெளிச்சம் அவரில் இருந்து வெளியே வந்து இந்து (ஹிந்து) மஹா கடலில் நின்று போனது. பிறகு கலியுகத்தில் அமெரிக்காவில் ஒரு நாட்டில் ப்ளோரிடாவுக்கு கிழக்குப் பகுதியில் 500 கிலோ மீட்டர் தூரத்தில் வந்து இருந்ததை, நாங்கள் எழுதியதில் **"த்ரைத்தாகாரா ரகசியம்"** என்னும் கிரந்தத்தில் எழுதி இருக்கிறோம். அந்த கிரந்தத்தில் ராவணப்பிரம்மா பெருமையைப் பற்றி சிறிது வரை சொல்லியுள்ளோம். இன்றும் ராவணப்பிரம்மா அடையாளமாக அட்லாண்டிக் கடல் மீது யாருக்கும் தெரியாத சக்தி எந்த பரிசோதனை செய்பவருக்கும் தெரியாமல் இருக்கின்றது. திரைத்கார சக்தியாக கடலில் உள்ள இன்றும் அந்த சக்தியை அடையாளிக்காதவராக இருக்கின்றோம் என்றும் **"த்ரைத்தாகார ரகசியம்"** என்று எங்கள் கிரந்தத்தில் எழுதியுள்ளோம். ராவணப்பிரம்மா பிறந்தது த்ரைத்தயுகத்தில் ஆனால் அந்த யுகம் பெயர் இன்று சிறிது மாற்றம் அடைந்து திரேதாயுகமாக சொல்லப்படுகின்றது. த்ரைத்தாயுகத்தில் பிறந்தவர் ராவணப்பிரம்மா மேலும் அவர் அடையாளமாக த்ரைத்தாகார சக்தி இப்போதும் இருக்கின்றது.

**கேள்வி:- இன்று “தலித்தர்கள்” இந்தப் பெயர் இருக்கின்றவர் ராவணப்பிரம்மாவை பெரிதாக பார்க்கின்றார்கள். “எங்கள் கீழ் உள்ளவர்” என்னும் பெயர் இருக்கின்ற வரை தலித்தர்களாக சொல்கின்றார்கள். எங்கள் கீழ் உள்ளவர் ஒரு குலம் அல்ல என்னும் நீங்கள் சொன்னீர்கள் அல்லவா! ஒரு குலம் இல்லாதவருக்கு கீழ் உள்ளவருக்கு தலித்தர்கள் என்று பெயர் எப்படி வந்தது? இன்று தலித்தர் சங்கங்கள் பலதும் இருக்கின்றது. அவர்களை விசாரித்தபோது தலித்தர்கள் என்னும் வார்த்தைக்கு சரியான பதில் சொல்லாமல் அவர்களுடைய ஒரு குலமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் கீழ் உள்ளவர் குலத்திற்கு சேர்ந்தவர் தலித்தர்கள் என்று பல பேர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக தலித்தர்கள் என்றால் யார்? அந்தப் பெயர் அவர்களுக்கு எப்படி வந்ததோ நீங்கள் விவரமாக சொல்வீர்கள் என்று கேட்கின்றோம்?**

**பதில்:-** நீங்கள் சொல்லியது போல் எங்கள் கீழ் உள்ளவர்களை தலித்தர்கள் என்று சொல்கின்றார்கள். “எங்கள் கீழ் உள்ள” என்பவர் குலத்தை சேர்ந்தவர் அல்லவென்று, அஞ்ஞானியாக இருக்கின்ற வரை எல்லோரையும் கலந்து சொல்லிய வார்த்தை என்று முதலிலேயே சொல்லி உள்ளோம். இப்போது சொல்லிய தலித்தர்கள் அவர்களும் கூட ஒரு குலத்தை சேர்ந்தவர்கள் அல்ல. அஞ்ஞானத்தில் உள்ள எல்லாம் குலத்தை சேர்ந்தவர்களையும் கலந்து சொல்லிய வார்த்தை “தலித்தர்கள்” அல்லது எங்கள் கீழ் உள்ளவர்கள். என்ன அந்த கீழ் “தலித்தர்” என்னும் சொல்லினாலும் இரண்டும் எல்லாம் குலத்திலேயும் அஞ்ஞானிகளை தெரிவிக்கும் வார்த்தை என்று அது குறிப்பாக ஒரு குலம் அல்ல. சத்தியத்தை சொல்லினால் **“தலம்”** என்னும் வார்த்தையிலிருந்து **“தலித்தர்”** என்று வார்த்தை ஏற்பட்டது. தலம் என்றால் **பல பேர்கள் ஒரு கூட்டமாக சேர்ந்து இருப்பது தலம்** என்று சொல்லுவார்கள். அந்த தலத்தில் உள்ள வரை

தலித்தர்கள் என்று சொல்லலாம். எங்கேயாவது ஒரு தலம் தயாரானால் அந்த தலத்தில் ஒரு ஜாதி, ஒரு குலம் என்பவர் இருக்க மாட்டார்கள். அப்படியே அஞ்ஞான தலத்தில் ஒரு குலம் இல்லாமல் பல குலங்கள் இருப்பது உண்மை. அஞ்ஞானம் ஒரு குலத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல. எந்தக் குலத்திலவதும் அஞ்ஞானிகள் இருப்பார்கள். அப்படி அனைத்து குலங்கள் அஞ்ஞானிகளை கலந்து ஒரு கூட்டமாக சொல்லி அவர்களை தலித்தர்கள் என்னும் பூர்வம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்படியே அனைத்துக் குலங்களில் ஞானிகளையும் சேர்த்து **"பிராமணர்கள்"** சொல்லி **"திவிஜுலு"** என்று சொல்லுவார்கள். அஞ்ஞானிகளுக்கு "எங்கள் கீழ் உள்ளவர்" மற்றும் "தலித்துகள்" என்னும் இரண்டு பெயரில் சொல்லி, ஞானம் தெரிந்தவர்களையும் "பிராமணர்கள்" மற்றும் "திவிஜுலு" என்று இரண்டு பெயரில் அழைப்பார்கள். **கீழ் உள்ளவர்** என்னும் சொல்லினாலும், **தலித்தர்கள்** என்னும் சொல்லினாலும் ஒரு குலத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல **அனைத்தும் அஞ்ஞானிகளுக்கு** அடையாளமாக உள்ளது. அப்படியே பிராமணர்கள் மற்றும் திவிஜுலு என்னும் சொல்லினாலும் அது ஒரு குலத்திற்கு சம்மந்தப்பட்ட வார்த்தை ஆனதினால் **ஞானிகளை** அடையாளிக்கும் படி உள்ளது. திவிஜுலு என்றால் இரண்டாவது தடவை ஜென்மம் எடுத்தவர் என்று அர்த்தம். பூர்வம் இருந்த எண்ணம் போய் மக்களில் புதிய எண்ணம் வந்தது. இதற்கு காரணம் இன்று கடந்துபோன வரலாறு தெரியாத மனிதர்கள் சமூகத்தில் இருக்கின்றதினால், சத்தியத்தை விட்டு அசத்தியத்தை நம்பி தலித்தர்களை, எங்கள் கீழ் உள்ளவர் ஒரு குலமாக சொல்கின்றார்கள். அப்படியே பிராமணர்கள், திவிஜுலு என்பவரையும் ஒரு குலமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக எங்கள் கீழ் உள்ளவர் என்னும் சொல்லினாலும், பிராமணர்கள் என்னும் சொல்லினாலும் குலத்திற்கு சம்மந்தமில்லாத பெயர். ஞானத்திற்கு அஞ்ஞானத்திற்கு அடையாளமாக சொல்லிய பெயர் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது எங்கள் கீழ்

உள்ளவருக்கும் தலித்தர்களுக்கு விவரம் தெரிந்தது. அப்படியே பிரம்மஞானம் தெரிந்தவர்கள் பிராமணர்கள் என்று அர்த்தம் தெரிந்தது. பிராமணர்களை “திவிஜூலு” என்றும் பூர்வம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்று காலத்தில் பிராமணர்களாக இருக்கின்றவர்களுக்கு சிலருக்கு மட்டுமே “திவிஜூலு” என்ற வார்த்தை விவரம் தெரியும். இன்று சில பிராமணர்களுக்கு “திவிஜூலு” என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது. அவர்களைக் கேட்டால் திவிஜூலு என்னும் வார்த்தைக்கு சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை. திவிஜூலு என்றால் அஞ்ஞானத்தில் இறந்துபோய் ஞானத்தில் பிறந்தவர் என்று தெரியாது. இன்று இந்த பக்கம் கீழ் உள்ளவர், தலித்தர்கள் அந்தப் பக்கம் பிராமணர்கள், திவிஜூலு என்னும் வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் இரண்டு பக்கம் உள்ளவர்கள் தன்னுடைய பெயர்களை குறிப்பான குலம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக கடந்த வரலாறு தெரிந்தால் அவர் அப்படி நினைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். வரலாறு மறந்துபோன வராக பிராமணர்கள் அக்ர குலத்தைச் சேர்ந்தவர்கள் என்னும், தலித்தர்கள் குறைந்த குலத்திற்கு சேர்ந்தவர்கள் என்று சொல்கின்றார்கள். இன்று பெரிய, சிறிய குலங்கள் பைத்தியம் முற்றி போனதாக பிராமணர்கள் எங்கள் கீழ் உள்ளவர் என்னும், ஒட்டாதவார் என்னும் தூரமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி குலங்கள் என்பது மனிதர்களில் தொடங்கியது. திரேதாயுகத்தில் தொடங்கிய குலங்கள் என்பது இன்று வளர்ந்து பெரிதாகி உலகமெல்லாம் பரவியது. பாரத நாட்டில் தெற்குப் பகுதியில் தலித்தர்கள் அதிகமாக இருக்கின்றார் என்னும், வடக்கு நாட்டில் பகுதியில் பிராமணர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தெற்குப் பகுதியில் உள்ளவர்களை திராவிடர்கள் என்னும், வடக்குப் பகுதியில் உள்ள வரை ஆரியர்கள் என்னும் சொல்லி ஆரியர்கள் பிராமணர்கள், திராவிடர்களையும் தலித்தர்களையும் பொறாமை கொண்டு பாகுபாடுடன் பார்ப்பது பழகிப்போனது.

இது இன்று நாள் பிரச்சனை அல்ல. திரேதாயுகத்தில் பிறந்த பிரச்சனை என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆரியர்களாக இருந்த பண்டிதர்கள், ராமனை பெரியதாக சொல்லி ராவணனை குறைவாக, கெட்டவராக சொல்லுவது அந்த நாளே நடந்தது. ராமன் வனவாசத்தில் இருக்கும்போது ராவணன் ராமனுக்கு தெரியாமல் சீதாவை அழைத்துப் போனதினால் சீதா எங்கு இருக்கின்றது தெரியாமல் ராமன் நல்ல மலை காட்டில் சீதாவை தேடிக் கொண்டு போகும்போது அங்கு பழங்குடியினர் வாலி, சுக்ரீயன் அறிமுகமானார்கள். வாலி, சுக்ரீயன் உடன் அவர் படையில் அனுமந்தன், ஜாம்பவான்தன் அறிமுகமானார்கள். அப்போது அண்ணன் தம்பியாக இருந்த வாலி சுக்ரீயன் அவர் நடுவில் உள்ள சண்டையில் ராமன் நுழைந்து, வாலியைக் கொன்று சுக்ரீயனுக்கு நல்லது செய்தவனாக, நாங்கள் சீதாவை தேடுகின்றோம் என்று சொல்லினார்கள். முதலில் வாலியைக் கொன்றால் சீதாவை தேடுவதில் உதவி செய்வேன் என்னும் சொல்லிய சுக்ரீயன் அனுமன்தன்னை சீதாவை தேடு என்னும் சொல்லி ராமன் வேலைக்காக உபயோகப்படுத்தினார். அப்போது ராமனுக்கும் அனுமானுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. காட்டில் வசிக்கும் பழங்குடியினர் ஜாம்பவான்தன், அனுமந்தன், வாலி, சுக்ரீயன் குரங்கு உருவத்தில் இல்லை. அவர்கள் எல்லோரும் மனித ஜாதி தான். நம்மைப் போல் மனிதன் உருவம் கொண்டவர் தான். அந்த நாள் அவர்களுக்கு ராஜாவான சுக்ரீயன் சொல்லிய வார்த்தைக்கு கட்டுப்பட்டு அனுமான் (ஆஞ்சநேயன்) சீதாவை தேடி இறுதிக்கு லங்காவில் இருக்கின்றது என்று தெரிந்து கொண்டார். அனுமான் ஒப்புக்கொண்ட வார்த்தை தவறாமல் சீதாவை தேடுவதில் ராமன் பக்கம் பழங்குடியினர் ஆனவர்கள் எல்லோரும் போய், ராவணமப்பிரம்மா படையுடன் போர் செய்து, ராமனை வெற்றி அடையும் படி செய்து சீதாவை அழைத்து வரும்படி செய்தார்கள். இந்த விதமாக எவ்வளவோ நல்லது செய்தவர்களை நீச்சமாக பார்த்து, மனிதர்களாக இருந்தவர்களை குரங்குகளாக வரைந்து, சொல்லி ஆரியர்கள் இப்படி எழுதினார்கள். ஆரியர்கள் திராவிடர்களை

பாகுபாடுடன் பார்த்து, இறுதிக்கு அவரைவிட தெற்குப் பகுதியில் உள்ளவர்கள் குறைந்தவர்கள் என்னும் எண்ணத்துடன் வெளிப்படுத்தி ஜாம்பவான்தனை கரடியாக, அனுமானை குரங்காக வரைந்து காண்பிப்பதில் ஆரியர்களுக்கு நல்லது செய்தவர்களை நீச்சமாக வரைந்து காண்பித்து, ஆலோசனை செய்யாத மக்கள் மற்றும் திராவிடர்களும் அவர் வார்த்தைகளை நம்பி மனிதர்களை குரங்குகள் ஆகவே நினைத்துக் கொண்டார்கள். இது அநியாயம் என்னும் ஒருவர் கூட தெரிந்து கொள்ளாமல் போனார்கள். அனுமான் சீதாவை விடுவிப்பதற்காக வேலை செய்தார். பிறகு ராமனுக்கும் அனுமானுக்கும் எந்தவிதமான சம்மந்தம் இல்லை. ஆனால் அனுமன் ராமன் பக்தன் என்னும் வரைந்து ராமன் பாதங்களிடம் உட்கார்ந்து இருக்கும்படி வரைந்து காண்பித்தார்கள். அப்படி காட்டியதால் திராவிடர்கள் ஆரியர்களுக்கு சேவை செய்பவர்கள் என்னும் எண்ணத்தை உருவாக்கினார்கள். அனுமான் குரங்கு அல்ல, ராமனுக்கு சேவை செய்பவர் அல்ல, அவர் பாதங்கள் இடம் உட்காரவில்லை. அனுமான் குரங்கு என்பது எந்த அளவுக்கு உண்மையோ, ராமனுடைய பக்தன் என்பதும் அவ்வளவு உண்மை தான். இன்று கல்வியாளர்கள், மேதாவிகள், விஞ்ஞானம் தெரிந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். மனிதர்கள் போல் உள்ள குரங்குகளும், பேசுகின்ற குரங்குகளும் பூமி மீது எங்கும், எந்தக் காலத்திலேயும் இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் மல்லண்ணா சொன்னால் புள்ளண்ணா கேட்டார் என்பது பழமொழி போல் அனுமானை குரங்கு என்னும், ஜாம்பவான்தனை கரடி என்னும் சொல்லி எல்லோரும் கேட்டு தெரிவித்து அதையே வேறு அவர்களுக்கும் சொல்கின்றார்கள். பழங்குடியினர்யிடம் உதவி அடைந்த ராமன் அவர்களை விலங்குகளாக இருக்கின்றார் என்னும் தெரிவித்து, பக்தர்கள் போல் கால் இடம் உட்கார வைத்தது எது உண்மையோ, எது பொய்யானதோ நீங்களே யோசனை செய்து பாருங்கள். உண்மையை சொல்லும் நான் என்னை தவறாக எடுத்துக் கொள்ளாமல் புத்தியால் யோசனை செய்து

பாருங்கள். நாங்கள் எழுதியதில் **“திராவிடப்பிராமணா”** என்னும் கிரந்தத்தில் அனுமான் குரங்கு என்னும் சொல்லியதில் முழுமையாக அது உண்மை அல்ல என்று சொல்கிறோம். மேலும் அனுமான் எந்தவிதமாக பலசாலியானார் என்று நாங்கள் எழுதினோம். அனுமான் குரங்கு என்னும் சொல்லுவதில் எந்த அளவுக்கு சத்தியமோ, ராவணப்பிரம்மா கெட்டவர் என்னும் சொல்லுவதும் அவ்வளவு சத்தியமாகும். பாரத நாட்டில் ஆரியர்களுக்கு திராவிடர்கள் குறைவானவராக பூர்வத்திலிருந்து இருக்கின்றது போல் தெரிகின்றது. அதற்கு சாக்ஷயம் ராவணனை ராக்ஷஸன்னாக, அனுமானை குரங்காக, பழங்குடியினரை விலங்குகளாக ஒப்பிட்டு சொல்லுவது என்று தெரிகிறது. திரேதாயுகத்தில், துவாபரயுகத்தில் தெற்கு பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள் திராவிடர்கள் மீது மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் வித்தியாசம் காண்பித்துக் கொண்டே இருக்கிறார்கள். பூர்வம் இருந்ததுபோல் இன்று இல்லாமல் போனாலும் ஒரு ரூபாயில் 25 காசளவு இன்றும் இருக்கின்றது. முழுமையாக பாகுபாடு எப்போது இல்லாமல் போகும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இத்தனை காலத்திற்கு பிறகு தைரியமாக உண்மையைச் சொல்லினால் என் மேல் பொறாமைப் படாமல் உண்மையை தெரிந்து கொள்ளுங்கள் என்று தெரிவிக்கின்றேன்.

**கேள்வி:- இன்று காலத்தில் தசரா பண்டிகைக்கு, தீபாவளி பண்டிகைக்கு ராவணன் பொம்மையை வைத்து அதற்குப் பத்து தலை வைத்து பண்டிகை நாள் ராவணன் தஹனம் என்னும் பெயரில் ராவண பொம்மையை எரித்துக் கொண்டு இருக்கின்ற சாம்பிரதாயத்தை உலகமெல்லாம் பரவி கொண்டு இருக்கின்றது அல்லவா! நாட்டில் உள்ள அனைவரும் இத்தனை பேர் தவறு செய்கின்றார்களா? இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**பதில்:-** ராவண தஹனம் செய்வது தவறு. ஆனால் எல்லோரும் புரியாமல் யோசனை செய்யாமல்

செய்கின்றார்கள். முதலில் வடக்கு பாரத நாட்டில் உள்ள ராவண தஹனம் சாம்பிரதாயம் இன்று தெற்கு பாரத நாட்டிற்கு பரவியது. ஒவ்வொருவர் ராவணன் ஒரே ஒரு கெட்ட வேலை செய்தார் என்னும் அது சீதாவை கொண்டு போவது என்னும், சீதாவை அனுபவிக்க வேண்டும் அவர் கெட்ட நோக்கம் அவருக்கு இறப்பதற்கு காரணமானது என்று சொல்கின்றார்கள். ராவணன் சீதாவை அழைத்து போனது உண்மைதான் எந்த சந்தர்ப்பத்தில் நடந்தது எந்த நோக்கத்தில் நடந்தது என்னும் சிறிதளவு கூட தெரியாமல் பேசிக் கொண்டு, ராவணப்பிரம்மாவை கெட்டவராக சொல்கின்றார்கள். அந்தக் கெட்ட நோக்கத்தில் அவர் பொம்மையை எரிப்பது இன்றும் நடக்கின்றது. கடவுள் பூமியில் மனிதனாக அவதரித்து தன்னுடைய ஞானத்தை சொல்லி அவரில் உள்ள பெருந்தன்மையை மக்கள் தெரிந்து கொள்ளாமல் போனதினால் ஞானத்தை சொல்லுபவர் மீது பகை சாதிக்கும் வேலையை ஆரம்பிக்கின்றார்கள். கடவுள் ஞானம் முன்பு மதம் பிடித்தவராக எதிர்ப்பாக நடந்து கொண்டு, பகவானுக்கு பல இடைஞ்சல் செய்கின்ற, கெட்டவர்கள் வேலை நிறைவேற்றும் கடவுளான பகவானும் அவமானம் அடைகிறார். கெட்டவர்கள் அஞ்ஞானிகள் ஆனவர்கள் தன பலம், அதிகாரம் பலம் இருந்து தாம் செய்யும் வேலையை எல்லாம் நிறைவேறுகின்றது என்னும் ஞானத்திற்கு தடையாக நடந்து கொண்டிருந்தாலும், பகவானை இடைஞ்சல் செய்யும் வேலையை செய்து கொண்டிருந்தால் அவர் வேலையை நிறைவேறுவது, இறுதிக்கு பகவான் ஒன்றும் செய்ய முடியாமல் அவரிடம் அவமானம் அடைவது நடக்கும். அஞ்ஞானிகள் தன பலத்தினால், பதவி பலத்தினால் செய்கின்ற வேலை சிறிதளவுகூட தடங்கல் ஏற்படாமல் கடவுளே அவமானம் அடைவது பார்த்தால் இதில் கடவுளினால் செய்ய முடியாதது தெரிகின்றது. பகவான் அவமானம் அடைந்து அவருடைய ஞானம் பிரச்சாரம் ஆகாமல் போவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. தன்னுடைய தர்மத்திற்கு ஆபத்து வந்தபோது அவதரித்து வந்து தர்மங்களை தெரிவிப்பது கடவுளே ஆனாலும் அவர்

பிரச்சாரம் செய்த ஞானம் அஞ்ஞானிகளினால் தடை செய்வதினால் அவதரித்த பகவானும் அவமானம் அடைந்து கொண்டிருந்தால், அதனை கடவுளினால் முடியாதது என்று அதனை வேறென்ன சொல்ல வேண்டும்? அடங்கிப்போன தர்மங்களை தெரிவிப்பதில் ஆர்வம் கொண்ட கடவுள், அஞ்ஞானிகளினால் பகவான் அவமானப்படும் போது, அவர் சொல்லிய ஞானமும் அவமானம் அடைந்தது போல் ஆனது அல்லவா? எந்த நாளோ திரேதாயுகத்தில் கடவுள் பகவானாக பிறந்து தன்னுடைய தர்மத்தை பிரச்சாரம் செய்தால், அவர் இருக்கும்போது அவர் ஞானத்தை பார்க்காமல், அவரை கெட்டவராக சொல்லிய மக்கள் அவர் வரைபடத்தையும், அவர் பொம்மையையும் அந்த நாளில் இருந்து இந்த நாள் வரை மூன்று யுகம் கடந்தாலும் விடாமல் "ராவண தஹனம்" என்னும் பெயரில் அவமானப்படுத்திக் கொண்டிருந்தால் அந்த வேலையை கடவுள் நிவாரிக்கவில்லை என்றால், அவர் சில வேலைகள் மட்டும் செய்வார், பெரியவர் என்று சொல்வார். மற்ற எல்லா வேலையும் செய்ய வில்லை என்னும், செய்ய முடியாமலே யுகங்கள் கடந்து கொண்டிருந்தாலும் தன்னுடைய அவதாரம் கொண்ட பொம்மையை அதே பெயரில் எரித்துக் கொண்டிருந்தால் இது நல்லது அல்ல என்று தெரிவிக்காமல் போனார். இதுவரை விவாரிக்காமல் போனார். இதனை பொறுத்து சன்மார்க்கத்தில் உள்ளவரை பயப்படுத்துவதற்கு கடவுள் என்னும், கெட்டவர்களை எதிர்ப்பதற்கு முடியாதவர் என்று தெரிகின்றது. சத்தியத்தை சொல்லினால் தனபலம், அதிகார பலம் இருக்கின்றவன் வேலை நிறைவேறுவது, பகவான் அல்லது ஞானிகள் ஞான சம்மந்தப்பட்ட வேலைகள் நிறைவேறாமல் போகும்போது பார்த்தால் மற்றும் கெட்டவர்களை கடவுள் ஒன்றும் செய்யாதபோது கெட்டவர்கள் முன்பு தோல்வி அடைந்தது போல் உள்ளது அல்லவா! ஞானமே பெரியது, கடவுளே பெரியது என்று நம்பிய எங்கள் போல் உள்ளவர்கள் செய்யும் வேலை நிறைவேறாமல் ஞானத்திற்கு தடை செய்யும் அஞ்ஞானிகள் வேலை நிறைவேறுவது, அவர் ஆரோக்கியமாக இருப்பது பார்த்தால் கடவுளும் செய்யாதது அதிகமாக இருக்கின்றது என்று

தெரிகின்றது. ஞானிகளுக்கு ஆரோக்கியம் நன்றாக இல்லாமல் போய் அஞ்ஞானிகளுக்கு, கெட்டவர்களுக்கு நன்றாக ஆரோக்கியம் இருக்கும் போது, எல்லா சுகம் அவர் அடையும்போது அஞ்ஞானிகளை கடவுள் ஒன்றும் செய்யாமல் போனார் என்று தெரிகின்றது. அதனால் என்னுடைய அனுபவத்தில் ராவணப்பிரம்மாவை, மற்றும் சில பேரை பார்த்த பிறகு கடவுள் எல்லாம் செய்வார் என்னும் நினைத்தால் பெரிய தவறாகும். அதனால் ஆத்மஞானம் தெரிந்துக் கொள்ளலாம், எல்லாத்துக்கும் கடவுளே என்னும் நினைப்பது தவறாகும் என்று சொல்லலாம். அதற்கு ராவணப் பிரம்மாவுக்கு நடக்கின்ற அநியாயம் பார்த்த பிறகு எங்கள் போல் உள்ளவர்களுக்கு கடவுளே என்னும் நினைப்பது தவறாகும் என்று தெரிகின்றது. **ஜாக்கிரதையாக இருங்கள்**.

**அசத்தியம் ஆயிரம்பேர் சொன்னால்,**
**அது சத்தியம் ஆகாது.**
**சத்தியத்தை ஆயிரம் பேர் அல்ல என்று சொன்னால்,**
**அசத்தியம் ஆகாது.**